புதினபத்திரிகையாகப் பதிவுச்செய்யப்பெற்றது.

இந்து சாதனம்.

THE HINDU ORGAN.

ஜீவாதிரு (1889) ஆவணிமீ உதித் சூரப்பாணை.

['ரெலிபோன்' இல. 56.]

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவைகேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்"

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு	ரூ.	5-00
இலங்கை, இந்தியா: "	ரூ.	8-00
தொலைப்பகுதி: "	ரூ.	9.00
தனிப்பிரதி:	சதம்	5

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன்முறைக்கு:—ஒருகலம்	ரூ	10-00
" அரைக்கலம்	ரூ.	5-00
" காற்கலம்	ரூ.	3-00

அதற்கு முறைக்கு ஷை விதிக்கலிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினுன்றிக் கவனிக்கப்படா

புத்தகம்—சுரு. } யாழ்ப்பாணம்;-பிரசோற்பத்திஷு புரட்டாதிமீ கடுஉ, (1931 ஒக்டோபர் 1உ) வியாழக்கிழமை. { இலக்கம்—உசு.

கணபதிதுணை.

சீர்பூத்த கருவினு னுணர்ச்சி தேங்கச்
செம்பூத்த மிகமாக மங்க லோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ளீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த பொன்னகரத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர்தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றேனு
மறம்பூத்தவிநாயகன்றுள் வணங்கிவாழ்வாம்

வாழ்க வந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தங்க மெடல்கள் பெற்ற
ஐரோப்பிய மதுரைக் கம்பனியாரால்
செய்யப்படும்,
திறமான குடை அடையாளமுள்ள
கொழுக்கி ஓடுகள்.

மதுரைக் கம்பனியார் சிறந்த குடை அடையாளமிட்டு [illegible]ந்த ஓடுகளை வெகு பணிக்காய் அமைத்திருக்கிறார்கள். வெயில், மழை, நெருப்புக்கு இதிலும் மேலான பாதுகாப்பு உபகாரணம் வேறொன்றில்லை. பல தொழில் நிபுணரின் பரிசோதனையால் இதன் இயற்கை மெச்சப்பட்டது. இதுவரை 10 தங்க மெடல் பரிசுக்குக் கம்பனியாரைத் தகுதியுடையவராக்கிப் புகழ்பெற்றது. மிக இலேசானது. மலிவானது. ஒவ்வொரு ஓட்டிலும் குடை அடையாளம் விளங்கும். சர்க்கேசர் துறையிலே கவனமாகக் கட்டப்படும் அரசினரின் சுகஸ்தான கட்டடங்களுக்கெனை இக்குடை அடையாளமுள்ள 55,000 ஓடுகள் பாவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த இனத்திலே கண்ணாடி ஓடுகளு முண்டு

ஜே. செருபிம் அன்ட் பிறதர்,
ஏசண்டர், பெரியதெரு, யாழ்ப்பாணம்.
(Y 9 8 1—31 12 31.)

ஸ்ரீகதிரைமலைத் திருப்பணி.

கலிவிருத்தம்.

திருமலிந்திடு தென்னிலங்கையின்
மருவுசண்முகன் மலையினன்பணி
புரியவேசிறு பொருள்கள்வேண்டுநீர்
அருளியாங்கவனருள் பெற்றுய்மினே.

தருமசீலர்களே!

உலகிலுள்ள எவ்வகை ஆத்மாக்களுக்கும் தம்முடைய அருட்செல்வத்தை வரையாது கொடுக்கும் வள்ளலாகிய அறுமுகப் பெருமான் கோவில் கொண்டருளிய ஸ்ரீகதிரைமலையிலமைந்திருக்கும் விவேகானந்த மடத்தில் தாகமற்றடைந்தோர்க்குத் தாக சாந்தி செய்விக்கப்பட்டு வருகிறது. அன்றியும் முன்னே அம்மலைக்குச் செல்வோர்க்கு அதிக கஷ்டத்தை விளைத்த சுற்று வழிகளை நீக்கி இப்போ அதிக சமிபமாகிய வழியைத் திறந்து முந்நூற்றைம்பதுபடிவரையில்பலபெரியோர்களது முயற்சியினுலும், திரவியோபகாரகாயத்தாலும் செல்வனே கருங்கற் கட்டிடமாய் கட்டப்பெற்றுள்ளது. எந்திய கருங்கற் கட்டிடத்திருப்பணியையுற்றுவித்தற்கு இப்போது பொருளுதவிவேண்டும். ஆகையால் பணம் அனுப்புவோர், தெளிவாகத் தங்கள் விலாசத்தை யெழுதி கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:—R. சிந்தாமணி அவர்கள்,
கச்சேரி யாழ்ப்பாணம்,
மேற்பார்த்து ரவண சங்கு சாது வசம்
கொடுப்பது.

(H. Y. 9. 8-6 & 7-12-31)

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரயுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகன்மைக்காகப் பிரசித்திருக்கிறேன். ஆனுல் சிறுபுக்கள் வாத்சியம்ல ஏழைகளும் இதனுலுண்டாகுங் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போதுஇந்த லேகியத்தைப்பற்றிப் பிரசித்தஞ் செய்கிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, லொவிந், கஸ்தூரி, குமரன்தாகா, பீநாகு, சாலாமுஸ்லி, சப்பேமுஸ்லி, பிஸ்தாக, சாம்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவரி, சீர்முஸ்லி கிதை, காகப்பூ வங்கபஸ்பம், அபிரகபஸ்பம், பவளப்பஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாலிசாரணிப் பதங்கம் இன்னும் அநேக பஷ்டவான மூலிகைகளைக் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனுல் சீழிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலரோகி, நரம்புகுடிந்துள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, சீனிசம் வைகால் காக்கந், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் நீங்கும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாயு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் நீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை குத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரைகுத்தலுக்கு ரூபா உ0. கால் குத்தலுக்கு ரூபா இ தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பிகுங்கு முதலிய தொலைவிராச்செய்யப்படுகிறது வீ. பீ. சட்டம் இல்லாதபடியால் முன்மணி ஆடர் அனுப்பல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
மிகுதான ஆரோக்கியகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்து,
மட்டக்களப்பு,
(Y.75. 31-12-31.) பிரோன்.

திறம் கொளுக்கி ஓடுகள்.

மோர்கன், நட்சத்திரம் 14, இஞ்சுப் பக்கா ஓடு முதலியன அடைமழைக்குங்கசியா. அண்டப் பார்த்தாப் போலக் கூரையில் அடுக்கலாம். பாரங்குறைவு, பெலனதிகம்; நல்ல அழுத்தமான இந்த ஓடுகள் 125 போட்டால், மற்ற ஓடுகள் 150 போடுகிற இடத்தை மூடும்.

விற்கும் இடங்கள்:—
யாழ்ப்பாணம்:—
மு. இராசேந்திரமுப்பர் கிட்டங்கித்தெரு.
பரித்தித்துறை:—
மு. நமசிவாயம் கடைத்தெரு.
ஊர்காவற்றுறை:—
கரம்பன்.
திருக்கோணமலை:—S. சின்னையா வில்லூண்டி.

(H 12, 10-1 32.)

உயர்தரமான தமிழ் நூல்கள்!

(1) தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு மெய்கண்ட விருத்தியுரையுடன் ரூ. 4. (2) பட்டினத்துப்பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய பிரபந்தத்திரட்டின் விருத்தியுரை ரூ. 3½. (3) திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும், தெளிபொருள் விளக்கப் பதவுரையும், விசேஷக்குறிப்புகளுடன் ரூ. 4. (4) விநோதாரசமஞ்சரி ரூ. 2. (5) அராபிக் கதை ரூ. 2½. (6) பழமொழியகராதி ரூ. 3. (7) ஆத்திசூடிப்புராணம் ரூ. 2. (8) கல்லாடம் மூலமும் உரையும் ரூ. 3. (9) காலடியார் ரூ. 2. (10) நைடதம் மூலமும் விருத்தியுரையும் ரூ. 4. (11) ராமகிருஷ்ணபரமஹம்ஸர் விரிவான சரித்திரம் ரூ. 3.

தமிழ்புத்தகக்யாட்லாக் இனும. ஒற்றுமை ஆபீஸ். 2. சைதாப்பேட்டை, மதருஸ்.

ஒற்றுமை ஆபீஸ், சைதாப்பேட்டை, மதராஸ்.

(Y 17. 7.9—8 9-32.)

Established 1909. A S. M. A. Khader Brothers

மருந்தேயமினும் விருந்தோடுண், என்ற ஔவைப்பிராட்டியாருரைப்படி
இந்த விளம்பர முழுதும் தாங்களும் வாசித்து
தங்கள் சிநேகிதர்களுக்கும் வாசித்துக் காண்பியுங்கள்.
குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக்கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

மாறுபாடில்லாதவுண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடில்லையுயிர்க்கு. (குறள்.)

தன்மருமுறவது நம்முயிரேயாதலால் மூவகைத்தோஷத்தாலும் பிணியாராதனவில் தடுப்பதாகிய நல்லவிதமாகிய அவிழ்தங்களை உண்டவர்களுக்கு பிணிகளால் துன்பமில்லையென திருவள்ளுவநாயனுர் கூறிய திருக்குறளையுணர்ந்த அறிவிற்சிறந்த அன்புடையோரே அருந்தக்கவீர்களாக.

நாகங் கெட்ட தேகத்தைக் காக்கும்; நாட்பட்டரோகத்தைப் போக்கும்.
உங்கள் பணத்திற்கும் மருந்தின் குணத்திற்கும் உத்தரவாதமளிக்கப்பட்டது.
நிகரற்றது! குணமுற்றது!! மகிழ்வுற்றது!!! புகழ்பெற்றது!!!!

ஜீவானந்த தாது விர்த்தி லேகியம்.

ஓ! அன்பர்காள்!! ஒருவனுக்கு வீரியத்தில் ஏதேனும் விகாரப்பமுண்டாயிருக்கின் அவன் எவ்விதகாரணத்தோஷத்திற்குரியவனுயினும் வீரியக்கெடுதலின் காரணுர்த்தமாகவே அவன் மனதிற்கு மேலும் மேலும் விசனத்தைத்தான் உண்டாக்கச்செய்யுமென்பது ஆயுர்வேத சாஸ்திரங்களின் துணிபுந் தவிர, இராஜாங்க வைத்தியர்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். அதனே, ரபுஸமம், அல்லது பேடித்தனமென்று சொல்லப்படும் அவ்விதத்துக்காரமான கொடிய வியாதியை அடியோடுதொலைத்து உலகின் வாழ்க்கையில் என்றுக்காணுத ஆர்த்த சுகாதாரவின்பத்தையடையச் செய்விப்பதில் இந்த ஜீவானந்த தாது விர்த்தி லேகியமே மிகவுஞ் சிறந்தது. இந்த லேகியத்தின் முக்கிய குணமாவது: இளமைப் பருவத்தில் பற்பல தூர்ச்செய்கைகளினுல் ஏற்பிராயத்தில் தேஹபலம்குன்றி நரம்புகள் தளர்வடைந்து இரத்தம் கெட்டுப்போய் சந்தானவிர்த்தியில்லாமல் வயோதிகர்போல் மயக்கிற்கும் புருஷர்களும், வாதாதி மூவகை தோஷத்தால் உண்டாகுன்டாகி பிரமேகச்சூட்டால் ரதமானது ஜலம்போல் நீற்று, கைகாலசதி மலசிக்கல், பசியில்லாமை, ஜீரணக்குறைவு, நித்திராபங்கமென்னும்வலிதம், தாரிதவலிதம், முளையின்கொதிப்பு கண்ணெரிவு, தேகஅனல் இடுப்புவலி, நீர்கடுப்பு, நீரெரிச்சல், நீர்கருக்கு முதலிய சர்வரோய்களையும், நோய்க்குத் தக்கபடி 40, அல்லது 20 நாளில் பூரணமாய் சுகப்படுத்தி, இரத்தத்தை சுத்திசெய்து தங்கள் தங்கள் சுபாவத்திற்கு மேலான வீரியத்தையும், மனவுற்சாகத்தையும் உண்டாக்கி, இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, தேகசக்தி, சந்தானவிர்த்தி, முதலிய நலன்களைச் செய்வதில் இதுவே மேலானதென்றும் கடவுளுக்குப் பொதுவாய் உறுதியாகச் சொல்லுகின்றோம். அப்படி இதில் சருக்கமாய் காட்டியுள்ள குணவாத்திற்கு மேற்கொண்ட பலனையடையவில்லையென்று கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின்பணத்தை உடனே வாபீஸ் செய்விக்கப்படும். அப்படி ஷை கிரயத்தை கொடுக்கத் தவறினுல் கோட்டுமூலமாக வசூல் செய்து கொள்ளலாம். மேலும் இயற்றுதின் குணவாத்தைப்பற்றிச் சந்தேகிக்கிறவர்கள், எமது மருந்தாலயத்திற்கு நேரில்வந்து தங்கள் தங்களுக்குரிய சந்தேகத்தை போதுமானவரையுமுன்னதாகவே செய்துகொண்டு வாங்கலாமென்பதாயும் திண்ணமாய் கூறுகின்றோம்.

40 நாள் 80 வேளை டப்பி 1க்கு கிரயம் ரூ 8 0 0
பரீட்சைக்க 20 நாள் 40 வேளை டப்பி 1க்கு ரூ 4 0 0

வி பி தபா[illegible]யேகம், முற்பணமனுப்பினுல் வி. பி. தபால் செலவு இனுமாய் அனுப்பப்படும். [illegible]கப்பூர், சீனுவான், கிறமபான், கோலாலம்பூர் ஆகிய ஜக்கிய மலாய் நாட்டு வாசர்[illegible]ரியமும் தபால் செலவு ரூ 2உ சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டு[illegible]வாசர்கள் அட்வான்ஸ் அனுப்பினுல், பாக்கி தொகைக்கும் வி. பி. யில் அனுப்பு[illegible] செய்பவர்கள் இப்பத்திரிகையின் பெயரை குறிப்பிட்டெழுதவும்.

Our[illegible]
P. M. A[illegible]Esqs,
Ceyl[illegible]y
No. 105, [illegible]e Maradana,
C[illegible]
(Y. 15[illegible]2.)

எமது விலாசம்:
ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் மெடிக்கல் ஹால்
பறங்கிப்பேட்டை, தென்னுற்காடு ஜில்லா,
இந்தியா.

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: பிரசோற்பத்திஷு புரட்டாதிமீ கடுஉ வியாழக்கிழமை.

வித்தியாபகுதி அறிக்கைப்பத்திரம் 1930

இலங்கை வித்தியாதிகாரியாகிய மிஸ்ரர் L. மைக்கிறே சென்ற 1930-ம் ஆண்டிற்குரிய வித்தியாபரிபாலன அறிக்கைப்பத்திரத்தை வழக்கம்போல் இப்பொழுது வெளியிட்டிருக்கின்றார். குறித்த ஆண்டில் இலங்கையிலுள்ள அரசினர் பள்ளிக்கூடத்தின் தொகை 1490 ஆகும். உதவிப்பணம் பெறும் வித்தியாசாலைகளின் தொகை 2502 ஆகும். 1930-ம் ஆண்டிற்றானே ஆரம்பித்த பணமுட்டுக் காரணமாக அரசினர் வித்தியா செலவைச் சுருக்க, இதனால் வித்தை விர்த்தியடையவில்லை யென்பதை மிஸ்ரா மைக்கேறே தமது அறிக்கை வெளியீட்டில் இடங்கள்தோறங் குறிப்பாகவும் வெளிப்படையாகவுங் காட்டியுள்ளார். பணமுட்டுக் காரணமாக புதிய பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டில; ஆசிரியர்கலாசாலைகள் புதியனவாகத் திறக்கப்பட்டில; பள்ளிக்கூடக் கட்டடங்களை அகலித்தல் புதுப்பித்தல்முதலியன செய்யப்படவில்லை; புதியபள்ளிக்கூடங்கள் பல பதியப்பெற்று உதவிநன்கொடைப்பணம் உதவப்பெற்றில; இதற்கு முன் உதவப்பட்டுவந்த கட்டட நிதி குறித்த வருடத்தில் அரசினராற் கொடுக்கப்படவில்லை; இறந்த உபாத்தியாயர், இளைப்பாறிய உபாத்தியாயர்களின் இடங்கட்குப் பிரதி உபாத்தியாயர்கள் பெரும்பான்மையும் நியமிக்கப்படவில்லை; உள்ள உபாத்தியாயர்களின் தொகையையும் குறைத்தற்காகிய வழிவகைகள் யோசிக்கப்படலாயின; இப்படியான செலவுச் சுருக்கங்கள் பல 30-ம் ஆண்டிற் செய்யப்பட்டன என்று மிஸ்ரர் மைக்கிறே தெரிவிக்கின்றார்.

பணமுட்டுவிஷயமாக வித்தியாபகுதி உத்தியோகத்தர் விஷயத்திலும் ஒரு செலவுச் சுருக்கம் செய்ததாக வித்தியாதிகாரி தெரிவிக்கின்றார். அது என்ன சுருக்கமென்றால், வித்தியாதரிசிகளின் பிரயாணச் செலவைச் சுருக்கிவிட்டமையேயாகும். இந்த ஒரு செலவையுஞ் சுருக்கியதையிட்டு வித்தியாதிகாரியாகிய மிஸ்ரர் மைக்கிறே, பரிபாலனத்திறமை கெட்டுப்போய்விடுமே யென்று பயப்படுகின்றார். பள்ளிக்கூட விஷயத்திலும் உபாத்தியாயர் விஷயத்திலும் இன்னமுஞ் செலவைச் சுருக்கிவிட்டு, வித்தியாபகுதி உத்தியோகத்தர் விஷயத்திற் பிரயாணச் செலவைச் சுருக்காமல் முன்போல் அவர்கள் செலவை அரசினர் உதவிவரலாமே. இங்கே கல்வி விருத்தியாகாவிட்டாலும், உபாத்தியாயர்கள் வேதனங் குறைந்தாலும், பிழைப்புத்தான் இல்லாமற் போனாலும், வித்தியாபகுதியாரின் செலவைக் குறைக்கவிடலாமா? என்ன பஞ்சந்தான் வந்தாலும் உத்தியோக பதவியிலுள்ளவர்களின் சம்பளத்தைக் குறைத்தால், பிரயாணச்செலவைத் தவிர்த்தால் வித்தியா விர்த்தி கெட்டுவிடும்; சமபோசனமுஞ் சமாசனமும் இல்லாமற்போம். உத்தியோகத்தினர் போருட்டு வித்தியாபரிபாலனமும் பள்ளிக்கூடங்களும் இருக்கின்றனவேயல்லாமல், வித்தியாவிருத்தியின்பொருட்டும் பள்ளிக்கூடத்தின் பொருட்டும் உத்தியோகத்தினர் இருப்பவரல்லவே. அரசினர் ஊட்டி வருங் கல்வி பணமுட்டு நேர்ந்த இக்காலத்தில் எவ்வகையான துணையுஞ் செய்யச் சக்தியில்லாமல் இறைப்பணத்தின் ஒரு பெரும் பாகத்தைத் துர்விநியோகஞ் செய்தற்கு இடமாயிருத்தலினால் இந்தக் கல்விவிருத்தியையிட்டு யாதும் எழுதுவது மிகையாகும். இப்பொழுது அரசினர் ஊட்டுங் கல்விமுறை மாற்றப்பட்டா லன்றி இலங்கைவாசிகள் கல்வி விஷயமாக ஈடேறுதல் முடியாத காரியமாகும்.

"நவராத்திரி எப்பொழுது"

இவ்விஷயமாக, சென்னை "சித்தாந்தம்" என்னும் மாதப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அனுப்பிய ஒரு மிக நீண்ட விஷயத்தை இற்றைப்பிரசுரத்திற் பிறிதோரிடத்திற் பிரசுரித்திருக்கின்றோம். குறித்த ஆசிரியர் ஒரு புதிய ஆராய்ச்சியை இந்த விஷயத்தில் வெளிப்படுத்துவதை அறிஞருலகு நன்கு அவதானிக்குமாறும், அது விஷயமாக ஆராய்ச்சியாளர்கள் தமது அபிப்பிராயங்களைக்கூறுமாறும் கேட்கின்றோம். இவ்வாராய்ச்சியில் தக்க ஆதாரத்துடன், காய்த லுவத்தலின்றி, தர்க்க நீதியாக விஷயத்தை மாத்திரம் விசாரித்து எழுதப்படுவன பிரசுரத்திற்கு ஏற்றனவாகும்.

உலகம் பலவிதம்

வேலியிரைமேயத்தலைப்பட்டவாறு, சிலகாலமாக இங்கே பொலிஸ்பகுதியார் சமாதானத்தைக்காக்கின்றார்களோ கீக்குகின்றார்களோ என்ற விஷயத்திற் சந்தேகப்படவேண்டியிருக்கின்றது. வண்ணார்பண்ணைச் சிவன்கோவில் உற்சவகாலத்தில் கூடிய பிணக்கும் கல்லூர்க் கந்தசுவாமிகோவில் திருவிழாக்காலத்தில் கூடிய கிளர்ச்சியும் பொலிசார் மூலமாகவேயெழுந்தனவென்று இங்குள்ளார் பேசிக்கொள்ளுகின்றார்கள். பொலிஸ்பகுதியாருக்கும் வண்ணைச் சிவன்கோவில் ஆதீனகர்த்தருக்குமிடையே வியாச்சியமொன்று தொடருகின்றது. வியாச்சியம் தொடர்ந்தோர் பொலிஸ்பகுதியாராவர். இப்பொழுது நேர்ந்துள்ள றிக்ஷோ வண்டிக்காரரின்வேலைநிறுத்துதலிலும் பொலிசாரே சம்பந்தப்பட்டதென அறியக் கிடக்கின்றது. சிலமாசங்கட்குமுன் பிராயம் பற்றைச் சாண்டாருக்கும் பொலிஸ்பகுதியாருக்குமிடையே நேர்ந்த கலக கிகழ்ச்சிகள் காரணமாகப் பொலிசார் சாண்டார் மேல்வைத்த வழக்கு விசாரணை இன்னமும் முடியவில்லை. இப்படியான அகர்த்தங்களும் விபரீதங்களும் நேர்தலினால் பொலிசார் போக்கை இங்குள்ளார் நுட்பமாக அவதானிக்கவேண்டியிருக்கின்றது.

* * *

சென்ற வெள்ளிக்கிழமை (25-9-31) இரவு வடமராட்சியிலுள்ளதாகிய வல்லிபுரக்கோவிலில் நடந்த சப்பர உற்சவத்திற்கு வந்து கூடியசனங்களின்தொகை இதற்குமுன் எக்காலத்திலும் இல்லாதாம். கிரிமலை ஆடியமாவாசைத் தீர்த்தம், கல்லூர்க்கந்தசுவாமிகோவில் தேர் முதலாம் உற்சவங்களிலும் இவ்வளவு அதிகமான சனக்கூட்டமில்லையாம்; காரணமாயதென ஆராய்ந்தவிடத்திற் பின்வரும் விஷயம் புலப்பட்டது. குறித்த சப்பர உற்சவத்திற்குச் சென்றவர்களுட் பலர் அடுத்தநாள் பருத்தித்துறைக்கு மதுபானயாத்திரை செய்யும்நோக்கமாகவுஞ் சென்றவர்களாம். பருத்தித்துறை நகரம் அடுத்தகாட்டப்பாட்டையும் கெட்டகேட்டையும் எடுத்துச்சொல்வது முடியுங் காரியமல்ல. பட்டினம் முழுவதும் மதுபானமயக்கமாகக் காணப்பட்டதாம். பல்லாயிரக்கணக்கான குடிகாரருக்கு ஏககாலத்தில் வேண்டிய மதுபானத்தை இல்லையென்னாது உதவிய அரசினரின் வள்ளற்றன்மையை வியவாதார் எவருமில்லையாம். தங்கள் பட்டினம் மதுபான யாத்திரைக்குரிய தலமாயிருப்பது பருத்தித்துறைவாசிகட்குப் பெருமையன்றோ.

பவுண் விலை.

ஒருதங்கப்பவுண் இப்பொழுது 16ரூபா 50 சதமாக விலைப்படுகின்றது.

காந்தி ஜயந்தி.

மகாத்மா காந்தியின் ஜனனதினம் அக்டோபர்மீ 2உ வண் வெங்கடேசப் பெருமாள் கோயிற் சந்நிதானத்திலே நடைபெறுமெனவும், அத்தருணத்திலே ஸ்ரீமாந் வை துரைசுவாமியவர்கள் அக்கிராசனம் வகிப்பரென்றும் அத்தருணத்திலே 'வட இலங்கைத் தேசிய மஹாசங்கம்" என ஒரு சங்கம் ஸ்தாபனம் பண்ணப்படுமெனவும் யாழ்ப்பாணம் வாலிபர் மஹாநாட்டார் தெரிவிக்கின்றனர்.

மஹாத்மாவின் பிரதிமைப்படம் ஒன்று சர்வாலங்காரமாகி மேளவாத்தியத்துடன், வண்ணை செட்டித்தெருவிலிருக்கும் தங்கள் காரியாலயத்திலிருந்து ஊர்வலமாகச்சென்று வெங்கடேசப்பெருமாள் கோவிலை அடையுமென யாழ்ப்பாணம் வாலிப தேசிய சங்கத்தார் அறிவிக்கின்றனர்.

சுண்டிக்குளி மகாஜனசபை.

மேற்காணும் சபையாரின் ஆதீனத்தின் கீழ், 1931-ம் ஆ ஒக்டோபர்மீ 4-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை சாயங்தரம் 5-30 மணிக்கு, விறகுகாலைக் கருகலையிலுள்ள மேவின கடற்கரை யோரத்தில், யாழ்ப்பாண வரியிறுப்பேரின் பிரசித்த கூட்டமொன்று கூடப்படும்

இங்கு யாழ்ப்பாண நகர பரிபாலன சங்கத்தின் தற்போதைய அமைப்பைத் திருத்தும் நோக்கமாகவும் விசேஷகொம்மிஷனை அமை[illegible]ண்டுமென்றும், அது முடியாத[illegible]படி லோக்கல்போர்டை [illegible]ண்மேல் துரசண்டரை [illegible]ாசனராய் வைக்கும்படி அ[illegible] கேட்டல்.

தற்போதைய [illegible] விசுவாசமில்லாமையால் [illegible]னம் பள்ளனால், முதலிய[illegible]ர்மானம் பண்ணப் படுமெ[illegible] படுகின்றது.

றிக்ஷோகாரர் வேலை நிறுத்தியது.

நேற்று (30-9-31 த்தொடக்கமாகயாழ்ப்பாணப் பட்டினத்தில் கூலிக்கு விடப்படும் றிக்ஷோ வண்டிகள் கிடைத்தலரிதாயினகாரணம் என்னவென விசாரித்தவிடத்து பொலிசார் சிலருக்கும் றிக்ஷோக்காரருக்கும் சில தினங்கட்குமுன் நேர்ந்த பிணக்குக் காரணமாக இத்தொழில் நிறுத்துதல் நிகழ்ந்ததென அறியக்கிடக்கின்றது. ஒரு பொலிசிற்கு யாரோ றிக்ஷோ இழுப்பவன் அடித்தானென்றும், றிக்ஷோகாரனொருவனைப் பொலிசார் சிலர் பிடித்தடித்துக்கொண்டுபோய் பொலிஸ்தானத்தில் அடைத்தனரென்றும், இவன் பின்னர் பிணையில் விடப்படலில்லை யென்றும், இவை காரணமாகவே இந்த வேலை நிறுத்துதல் றிக்ஷோ காரருக்கிடையில் ஏற்பட்டதென்றும் அறியலானோம். இதனால் இங்குள்ளார் சென்று தத்தங் கருமங்கள் பார்ப்பதற்கும் பள்ளிக்கூடச் சிறுவர் சிறுமியர் பள்ளிக்கூடஞ் செல்வதற்கும் பெரும் இடையூறு நேரலாயிற்று. இவ்விஷயத்தில் யார்பாற்குற்றமென்பதை ஆராய்ந்து பின்னர்க் கூறுவோம். இங்கு இப்பொழுதிருக்கும் பொலிஸ்தலைவராகிய மிஸ்ரர் புறம்லி இவ்விஷத்திற் றலையிட்டு இதனைச் சமன் செய்தல்வேண்டும்.

இந்தியச் செய்தி.

3-ம் பக்கத் தொடர்ச்சி.

வருகிற வாரத்தில் பாராளுமன்றம் கலைவுறுமென்று வெளிப்படுத்தப்பட்டு, அதன்பின் மந்திரிமார் வட்டமேசைச் சமாசத்தில் நேரத்தைமாத்திரம் போக்கிக்கொண்டு, தக்கவழிவகைகளை எடுக்காதிருப்பரேல் தாம் இந்தியாவுக்குத் திரும்புவதற்கு; விருப்பங் கொள்ளுவரென்றும் மஹாத்மா கூறினார்.

27—9—31.

லெஸ்ற் பிறூற் வோட் என்னும் இடத்தில் மஹாத்மாவைச் சந்தித்து அளவளாவினவர்களுக்கு, அவர் லான்காஷ்யரிலே தம்மை வரவேற்ற ஆர்வத்தைப்பற்றி மிக்க அன்புக் குறிப்பான வார்த்தைகள் கூறி, லான்காஷ்யரிலுள்ளார் அங்கு இப்போது நிகழும் பெருவிபத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும் பொறுமையை மிக வியந்து பாராட்டிக் கூறினார்.

எங்கும் பரவிக் காணப்படும் தொழிலின்மையைப்பற்றி தாம் மனச்சங்கடம் அடைவதாகவும், அது கல்லிணக்கம் ஏற்பட்டால் இந்தியா கொடுக்கும் உதவி ஒரு மட்டானதாகவே யிருக்குமென்றும் காந்திஜி கூறினார்.

இப்பொழுது ஒரு பொதுத் தேர்தல் நடைபெற்றால் அது அவருடைய வழிவகைகளை எவ்வாறு பாதிக்கும் என்று கேட்டபொழுது, அது மந்திரிமார்களின் மனோபாவத்தைப் பொறுத்ததா யிருக்குமென்று காந்திஜீ கூறினார். வட்டமேசைச் சமாசத்தின்நிகழ்ச்சிகளைத் தவணை போட அல்லது ஏதும் முடிவு செய்வதைத் தவிர்க்க அவர்கள் பிரியப்பட்டால் தாம் இந்தியாவுக்கு மீளுவதாகவும், தாம் பிரித்தானியாவுக்குப் பின்பு வருவது அப்பொழுது நிலவும் நிலைமையைப்பொறுத்ததாயுமிருக்கும் என்றனர்.

வட்டமேசைச்சமாஜம் இதுவரையில் எவ்வித முன்னேற்றமும், எவ்வித பிற்போக்கும் அடையாமலே இருக்கின்றதென்று மஹாத்மா சொன்னார்.

27—9—31.

வெஸ்ற் பிறூன் வோட் என்னும் இடத்திலே ரூய்டர் தந்திப் பிரதிநிதியொருவர் மஹாத்மாவைச் சந்தித்து, பிருத்தானிய புடைவைகளைப்பற்றி மஹாத்மா கொண்டிருக்கும் நிலையைத் தெளிவுறக் கூற வேண்டுமென்று வேண்டிக்கொண்டதற்குப் பதிலாக அவர் கூறியது:—

இப்பொழுது திருப்திகரமான ஒரு இராசியமுடிவு உண்டாகுமேயானால், தாம், லாங்காஷ்யர்ப் புடைவைகளைத் தவிர ஏனைய அன்னிய ஆடைகளைத் தடுப்பதாகவும், அப்படி லான்காஷ்யர் புடைவைகளையும், இந்தியப் புடைவைகள் உபயோகப்படுவதற்கு மேற்பட்டுத் தேவையிருந்தால் அப்படியான தேவை யில்லாதுபோகும்வரையில் ஏற்றுக் கொள்ளலாகும், என்றனர்.

இது புடைவைத்தரத்தையும் விலைகளையும் முன்னதாகவே பொருத்திக்கொண்ட பொருத்தனைக்கமைவாகவேகடைபெறும். ஐப்பசனைப்பற்றி எவ்வித வித்தியாசமும் காட்டப்படமாட்டாது. மறியல் பிரித்தானியச்சரக்கல்லாத முற்றை எல்லாச்சரக்குகளுக்கும் உள்ளதாகவே யிருக்கும்.

"நாங்கள் அன்னிய ஆடைகளைப் பாவிப்பதேயானால் அவற்றைப் பிரித்தானியாவிலிருந்து பெற்றுக்கொள்ளாதிருப்பது மூடத்தனமாகும். இங்கிலாந்து எமது பங்காளியாக விருப்பின் புடைவைகளை அமெரிக்கா, இத்தாலி, ஜப்பான், அல்லது வேறு அந்நியதேசங்களிலிருந்து பெறுவது மடமையாகும்" என்றுகூறினார்.

இப்படித் தாம் கூறியது, இந்தியா பூரண சுயவாட்சி யுடையதா யிருப்பதும், லான்காஷ்யரின் நன்மைக்காக இந்தியா எவ்விதத்தானும் கஷ்டமடையாமலிருப்பதும் ஆகிய நிலைமைகள் ஏற்படிற்றான் என்று மஹாத்மா வற்புறுத்தினார்.

இன்று இரவு காந்தி லண்டனுக்குத் திரும்புகின்றனர்.

லண்டன், 28-9-31.

இந்து முஸ்லிம் பிரச்சினையைப்பற்றி அளவளாவுதற்குக் காந்திஜீ அகாகான் அவர்களைத் தங்கட்கிழமை இரவு சந்திப்பார்.

லெஸ்ற்பிறூற்வோட்டிலிருந்து மோட்டர் ரதமார்க்கமாக மான்செஸ்றருக்குச் சென்று அர்த்தராத்திரியில் மான்செஸ்றரை நீங்கினர். அவருடைய மௌனநாள் சாயங்தரம் 7 மணிக்கே தொடங்கிவிட்டது.

28-9-31.

காந்தியார் லண்டனுக்கு வந்துசேர்ந்தனர்.

நக்பி, 28-9-31.

சிறுதொகைக் கட்சியாளர்களின் சங்கப் பிரிவு இன்று கூடியது முதன் மந்திரியார் அக்கிராசனம் வகித்தனர். வகுப்புவாரித் தகராறுகளையும் சிறுதொகைக் கட்சியாளர்களின் பிணக்குகளையும் இந்தியர்கள் தாங்களே ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டுமென்று அவர் கூறினார். சிலர், இந்திய வகுப்புப்பிணக்கைப் பிரித்தானிய அரசாட்சியாரே இணக்கஞ் செய்யவேண்டுமென்கின்றனர். அப்படியானால் அது மிகவும் திருப்தியற்ற முடிவை யுண்டாக்கும். மேலும், தாம் கல்லிணக்கத்திற்காகவேண்டிய துணை புரிவதற்கு ஆயத்தமாயிருக்கிறதாகவும், இந்தியர்களே இப்பிணக்கிலுள்ள முக்கிய பிரச்சினைகள் யாவற்றையுந் தீர்த்துக்கொள்ளும் பொறுப்பை ஏற்கவேண்டுமென்றும் முதல்மந்திரி கூறினார். சங்கப்பிரிவு கூடிய பொழுது இந்தியாவின் அனேகசிறுபான்மைக் கட்சியாளர்களின் அபிப்பிராயங்கள் சொல்லப்பட்டன. இன்று இரவு ஒரு சிநேகபான்மையுள்ள கூட்டம் நடைபெறுமென்றும், அப்பொழுது சகல முஸ்லீம் பிரதிநிதிகளையும் காந்திஜி சந்திப்பாரென்றும் அக்கான் கூறினார்.

இச்சங்கப்பிரிவு வியாளக்கிழமைவரையும் கூடாமல் விடுவது, இந்து-முஸ்லீம் பிணக்குகளைமாத்திரம் தீர்த்துக்கொள்வதற்கல்ல, எல்லாச் சிறுபான்மைக் கட்சியாளர்களின் பிணக்குகளையும் தீர்த்துக் கொளவேயாகுமென்று முதன்மந்திரியார் கூறினார். மேலும் இச்சங்கத்தின் முன் கடைசித் தீர்மானங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டியஅவசியத்தை முதன்மந்திரியார் பிரதிநிதிகளுக்கு வற்புறுத்தி, இப்போது இச்சிறுசங்கத்தின் கூட்டம் தவணை போடப்பட்டது, இதுவரையில் இணக்கங் கொள்ளாதவகுப்பாராகும் சிறுபான்மைக் கட்சியார் யாரும் இருப்பரேல் அவர்கள் தங்கள் பிணக்குகளைத் தீர்த்துக்கொள்வதற்காகவென்றும், இந்தச்சிறுகாலத்துள் உள்ளவில்லங்கங்களை யாவற்றையும் அவர்கள் ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டுமென்றுமகூறினார்.

பொதுவான இணக்கம் உண்டாவதற்கு இது ஒரு பிரதான வழியாகும். ஆனால் இந்த இணக்கம் ஒரு பொதுவானதா யிருக்கப்போகின்றது.

இன்று சம்யுக்த அரசாட்சித் தனுதிகாரசங்கப் பிரிவு கூடி, சம்யுக்த அங்கங்களுக்கும் மத்திய அரசாட்சி ஸ்தாபனத்திற்கும் பொதுவாக ஒரே வரவுசெலவுத் திட்டம் செய்துகொள்வதென உடன்பாடு கொண்டது பின்னர் உத்தியோகங்களையும் சனங்களின் பாதுகாப்பையும்பற்றி அது பரியாலோசனை செய்யத் தொடங்கியது.

லண்டன் 28-9-31.

றிற்ஸ் ஹோட்டலில் காந்திஜியும் சரோஜனிதேவியாரும் முஸ்லிம் பிரதிநிதிகளைச் சந்தித்து அக்தாங்கமாக அளவளாவினார்கள். அக்கான் இவர்கள் இருவரையும் வரவேற்றனர். மூவரும் படம்பிடிக்கப்பட்டதின்பின் மேல்மாடியிலே எல்லோரும் கூடியுரையாடினார்கள். காந்திஜியும் அக்கானும் 2½ மணிநேரம் அளவளாவினார். டக்டர் அன்சாரி இச்சமரசத்திற் பிரசன்னராகவேண்டுமென்ற பிரச்சினையும் பேசப்பட்டது. எவ்வித முட்டுத்தடையும் இல்லாதிருந்தபோதிலும எவ்வித முடிவும் எடுத்துக்கொள்ளவில்லை.

தற்காகவேண்டுமென்றே இந்த இடத்தை நீங்கள் தெரிந்தெடுத்துக் கொண்டீர்களா? பிரார்த்தனையின்போது, சில நிமிஷநேரம் இந்த இடத்தில் உட்கார்ந்திருப்பது எவனுக்குப் பெரிய கஷ்டமாயிருக்கிறதே" என்று கூறினார்.

இப்பொழுது, இந்தியப் பிரயாணிகள் அனைவரும் கடல்நோய் நீங்கினவர்களாய் இருப்பதால், சாப்பாட்டு அறையில் அதிக ஜனங்கள் கூடத் தொடங்குகிறார்கள். மேற்று எவனுடைய பிரார்த்தனைக்கு இருபத்திரண்டு பேர் வந்திருந்தனர். காந்தியடிகளின் நினைவரிவேலைகளில் எவ்விதத் தடையும் ஏற்படவில்லை. வழக்கம்போல் 9-30 மணிக்குப் படுக்கச் சென்று விடியற்காலை நான்குமணிக்கு எழுந்துவிடுகிறார். தினந்தோறும் அவர் கவனிக்கும் அலுவல்களைக் கவனித்துவருகிறார்.

பி. அண்டு ஓ. கம்பெனியின் தலைவரான லார்ட் இஞ்ச்கேப், காந்தியடிகளை எவ்வளவு திட்டியபோதிலும், அவருடைய 'இராஜ புத்தானா'க்கப்பல் உத்தியோகஸ்தர்கள், காந்தியடிகளிடம் மாத்திரமல்ல, எங்களிடத்திலும் அதிக விசுவாசத்துடன் நடந்துகொண்டிருக்கிறார்கள். நாங்கள் கதர்லேஷ்டி, கதர்குடுத்தா, கதர்குல்லாய் இவைகளுடனேயே கப்பலை சுற்றிவருகிறோம்.

இந்தப் பிரயாணத்தில் நிறவேற்றுமை, ஜாதிவேற்றுமை முதலியன எதுவும் காணப்படவில்லை. பி. அண்ட் ஓ. கம்பெனியைச் சேர்ந்த எல்லாக்கப்பல்களிலும் இதேமாதிரி நடைபெறவேண்டுமென்று விரும்புகிறேன். நடசக்தி.

"தோன்பென்பது கொன்று தின்னுமை"

"எத்துணையும் பேதம் உறாது எவ்வுயிர் தம் உயிர்போல் எண்ணி உன்னே, ஒத்து உரிமை உடையராய் உலகின்றார் யாவர் அவர் உலகர் தான் கத்த, சித்துருவாய் எம்பெருமான் நடம் புரியும் இடம் என நான் தெளிந்தேன் அந்த, வித்தகர் தம் அடிக்கு எல் புரிந்திட என் சித்தை மிக விழைந்த தாலோ!"

என்னுமித்திருவருட்பாவால் நாங்கள் உயர்வு தாழ்வு என்பதைச் சற்றேனுஞ் சிந்திக்கக் கூடாது என்பது வெளிப்படை. எல்லா வுயிர்களையும் நாஞ் சிறிது பேர்தது என்னும் பேதமின்றி எமதுயிர்போல நன்கு மதிக்கவேண்டுமென்பதும் இவ்வாசிரியரு னபிப்பிராயமாகும். இதுவுமன்றி எல்லாவுயிர்களிலும் சமத்துவமான அன்புடையவர்களின் மனத்திற்குள் கடவுளான் திருநிருத்தஞ் செய்கின்றார் என்பதுமிதன் பொருளாகும். இவ்வாறாக மற்றும் தமிழ்க் கவிவாணர்களு மிதனுண்மையை வெளிப்படுத்தி யிருக்கின்றார்கள். "கற்றதனைம்மண்ணளவு கல்லாத தலகளவு", என்னுமான்றோர் திருவாக்கின் பிராகார மறற்றையெல்லா மீண்டுக் கூறுவதற்கு எமது கல்வியறிவு போதாதென்று கூறுவது மிகையாகாது. ஆகலினவற்றுள் சிலவற்றை மாத்திர மிங்கே கூறுவேம்.

உலகத்திலே எல்லாவிரதங்களிலுஞ் சிறந்தது "கொல்லாவிரத மொன்றே" அவற்றன்னும் உயிர்களைக்கொன்று அவற்றின் ஊனைப்புசியாமையே மிகவும் மேலான விரதமறிந் தருமமாகும். இதுபற்றியே "கோன்பென்பது கொன்றுதின்னுமை" என ஔவைப்பிராட்டியாரும் கூறியிருக்கின்றார். நாடோறும் பல வுயிர்களை வதைத்து அவற்றின் ஊனைப் புசித்துப் பெரும் பாவத்தை யீட்டி, வெள்ளிக்கிழமைதோறும், திருவிழாக் காலங்களோறும், சோமவாரம், பிரதோஷம், சிவராத்திரி முதலிய விசேஷ காலங்களோறும், விரதமனுட்டித்து, ஆசாரசீலராய்ச் சமயற்றொழில் முடித்து விதிப்படி ஆலயவழிபாடு செய்து போசன மருந்துவதிலும் பார்க்க, "கொன்றுதின்னுமை" என்று சொல்லப்பட்ட இம்மேலான கோன்பை யனுட்டிப்பதே பெருந்தருமமன்றிக் கடவுள் விருப்பமு மதுவேயாகும். மானுடப்பிறப்பே எல்லாவற்றிலுஞ் சிறந்ததாகையாலும், இப்பிறப்பிலேயே ராம "புண்ணியமெது பாவமெது," வெனப் பகுத்தறியு மாற்ற லுடையோதலாலும் இப்பிறப்பிலேயே நாம் கடவுளுடைய திருவடிநீழலை யடைவதற்கேற்ற வழிகளைத் தேடிக்கொள்ளல் வேண்டும்.

உலகத்திலே யுள்ள ஜீவாத்மாக்களெல்லாம் எமது தலைவராகிய முழுமுதற் கடவுளாலேயே படைக்கப்பட்டன வென்றும் மனிதர்களுக்கு இவ்வுலகி லெல்லாவது இன்பதுன்ப மிருகின்றதோ அவ்வாறாய் மற்றும் ஜீவசெந்துக்களுக்கு முள்ள வென்றும் அறிவாளர் கூறுகின்றார்கள். ஒரு மனிதனை இன்னொருவன் கொலைசெய்துவிட்டானென்றால், அவன் எவ்வாறு இங்குள்ள நீதிஸ்தலங்களில் விளக்கப்படுகின்றானோ அதேவாறாய் மற்றும் ஜீவாத்மாக்களைக் கொலை செய்தவர்கள் மறுலகத்தில் விளக்கப்படுவார்களென்றும், மேற்கூறிய மனிதக் கொலையைச் செய்தவர்கள் எவ்வாறு சிறைச்சாலையிலிருந்து துன்பப்படுவார்களோ அதேவாறாய் ஜீவசெந்துக்களைக் கொலை செய்தோரும் மறு உலகத்தில் வருந்துவர் என்பது சத்தியம். "ஈகர்க்கம் நாரம்" என்று சொல்லப்படு மிருவகைப் பதவிகளுட் கொலைப்பாதகர்கள் 'நாரகம்' என்று சொல்லப்படும் கொடிய பதவியை யடைந்து பல்லாண்டுகளாகத் துன்பக் [illegible] மிழ்ந்துவர். அதுபற்றியே ஏழ்க்காண [illegible] யார்கள் கூறப்பட்டிருக்கின்றன.

"சடக்கடத்தக் கிளை [illegible] மைக் கொன்று, விடக் [illegible] மாந்திருந்து மிக மெலி [illegible] றுழல்வார் ஊமைக் [illegible]

கடிக்கும் பொழுதேது செய்வார் கச்சியேகம்பனே"

எனப் பட்டினத்துப் பிள்ளையாரும் கூறியிருக்கின்றார். இதன் பொருள்:—

"காஞ்சி மாநகர்க்குன்வளர் ஞானக் கண்மணியிடை! ஜடபதார்த்தமாகிய இவ்வுடலுக்கு ஆதாரமாகச் சில ஜீவசெந்துக்களை வதைத்து அமம மிகவான மென்று கொண்டு நின்றகிடக்கும் மாந்தரை இயமதர்மராசன் கைக்கொண்டு மகா கடுமையாகத் தண்டனை செய்யும்போது அவர்கள் யாது செய்வார்களோ?" என்பதே.

இதன் சான்றாக இன்னொரு பெரியாரின் கூற்றைக் காண்க:

"கொன்றுவிலங்கின்றசைநாகரும்
கொடுமையோதல்வினைகிடுட
ஞன்றுமயிரெத்துணையாத்துணைய
காலம்வெந்நரகி
னொன்றிநுரர்வாய்புழுவொழுக
வுழப்பரென்றையுணர்ந்தேயோ
கன்றினவெகுகொடுவிலங்கும்
புலவூன்றின்னக்கருதாவால்" என்பதே.

(வரும்,)

வே. பொ. சிற்றம்பலவாணர்,
தலையாழி, யாழ்ப்பாணம்.

பிதாமாதாக்களுக்கு இரட்டைப்பிள்ளைகளிருந்தால் இரண்டாவதுபுத்திரனை தகனாதிகருமங்களைச் செய்யவேண்டு மென்பதற்கு நியாயமும் பிறவும்.

கர்ப்பாதான சமயத்திலே கருப்பையினது புஷ்பம் விரிந்திருக்கும்போது புருஷனுடைய வீரியம் சிதறுண்டு முன்னும் பின்னுமாக கருப்பப் பைக்குள் சென்றால் அப்பொழுது அதுகருவாகி இரட்டைப் பிள்ளை பிறக்கும். முதலில் பிறந்தது இளையதென்றும், இரண்டாவது பிறந்தது மூத்ததென்றும் சொல்லப்படும் அதனை மேலும் கீழுமான கேற்பமென்றும் பக்கங்களிலுண்டான கேற்பமென்றுமறிந்தே முதல் பிறந்தது இளையதென்றும் இரண்டாவது பிறந்தது மூத்ததென்றும் நியமித்தார்கள். ஆயுர்வேத முறைப்படி இரண்டு பங்கங்களிலுங் கேற்பம் இருப்பதுண்டு. பிதாவினுடைய வீரியம் பிரவேசித்த முறைப்படியே குழந்தை பிறக்கும் ஆகையால் பிதாவினுடைய தகனாதிகருமங்களைச் செய்வதற்கு இரட்டைப்பிள்ளைகளில் இரண்டாவது பிள்ளையே மூத்தவனென்றறிந்து அவனே பிரதான[முதல்] கர்த்தாவாகவிருந்து கருமங்களைச் செய்தல் வேண்டும்.

ஒருவன் விவாகஞ்செய்து நெடுங்காலமாகப் புத்திரபாக்கியமில்லாதபொழுது ஒருவருடைய புத்திரனை இயன்ற திரவியங் கொடுத்துத் தாராதத்தமாக வாங்கப்பட்டவனாகிய தத்தபுத்திரன் இருக்குங்காலத்திலே தனது மனைவியிடத்திலே தன்னாலே பிறப்பிக்கப்பட்ட சுவபுத்திர னெனப் படுகிற ஔரசபுத்திரன் பிறந்துவிட்டால் அந்த ஔரசபுத்திரன் வயசில் தத்தபுத்திரனை விடச் சிறுவயசாயிருந்தாலும் ஔரசபுத்திரனே பிதாமாதாக்களுடைய தகனாதிகருமங்களைச் செய்ய வேண்டும். தத்தபுத்திரன் செய்யக்கூடாது.

புத்திரர்க ளிருக்கும்போது வேறொருவரும் தகனாதிகருமங்களைச் செய்யக்கூடாது. புத்திரர்களிருக்கும்போது வேறொருவன் தகனாதிகருமங்களைச் செய்தால் பிதிர்க்கள் இம்சிக்கப்பட்டவர்களாவார்கள். மனைவி கருப்பவதியாயிருக்குங் காலத்திலே சௌளஞ்செய்யாதவனுக்கு கேற்ப திட்சை யுள்ளவனுகியிருந்தாலும் பிதாமாதாக்களுக்கு மாத்திரம் தகனாதிகருமங்கள் செய்யவேண்டும்.

கேற்ப திட்சையுள்ளவன் தன்பிதாமாதாக்களுக்கும், புத்திரனில்லாத மூத்ததமையனுக்கும், தாய்மாமனுக்கும், தனது பிள்ளைக்கும், தகனாதிகருமஞ் சவுளமுஞ் செய்யலாம்.

மாதாவின் பிதா, மதா, சிறியதகப்பன், சிறியதாய், பெண்கொடுத்த மாமன், மாமி, குரு, குருமனைவி, தாயாரின் சகோதரி, தமக்கை இவர்களிறந்தால் கேற்பதிட்சையுள்ளவனாயிருந்தாலும் சௌளஞ் செய்து கொள்ளலாம்.

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்,
அம்மன்கோயில்,
சுதுமலை.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

—:*:—

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டங்களைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்ற அடைவு பிடிக்கும் நிரிகோணமலை 8-ம் நெம்பர் காசுக் கடைவீதி வெற்றிவேலு கனகசபை என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த எலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1930-ம் ஆண்டு 3-ம் மீ

இல.	உ	ரூ	ச.	நகைகளின் விபரம்.
12031	12	11		தங்கப்பவுண் 1
12707	27	20		சவுக்கமணிக் கோர்வை 1, சிறு திருகுபூ 1

1930-ம் ஆண்டு 5-ம் மீ

	1	10		ஒரு கல் செருகு தோடு சோடி 1
		10		இமிற் கல் மோதிரம் 1
		10		வெ எஸ்கறணை சோ 1
14476		7		குவளைக்கடுக்கன் சோடி 1
14485		10		கலாவரை மோதிரம் 1
14494		22		கைச்சங்கிலி 1
14497		45		தாலிக்கொடி 1
14524	2	12	04	பொன் தாலிக்கொடி 1
14556	8	10		தங்கக்காப்புசோடி 1
14582		20		ஒரு பட்டிலைமாலை 1
14585		37	60	சங்கிலியட்டியல் 1
14586		55	04	கைச்சங்கிலி 1, தங்கக்காப்பு சோடி 1
14604	4	20		மொளிக்காப்பு 1
14615		25		கைச்சங்கிலி 1
14616		9		மோதிரம் 1
14633		6		பொன் தோடு சோடி 1
14646		15		வெபழையபாதசரம் சோ 1
14658	5	10		மோதிரம் 1
14692		10		மோதிரம் 1
14737	7	15		தங்கக்காப்பு சோடி 1
14741		18		தங்கக்காப்பு சோடி 1
14750		35	04	முரிசுகட்குத்தியட்டியல் 1
14777		12		வெ பாதசரம் சோ 1
14784		15	04	பொன் கம்பிப்பூரானட்டியல் 1
14790		45		டி சங்கிலியட்டியல் 1
14801	8	7	50	வெ அடுக்குக்காப்பு சோ 1
14810		16		பத பொன் சறடு 1
14812		16		பொன் கைச் சங்கிலி 1
14852		10	04	ஒற்றைக்கல் செருகுதோடு சோடி 1
14853		120	04	ஓப்பின் காப்பு சோடி 1, இருதயமுடன் முடிச்சுச் சங்கிலி 1
14867	9	12		வெ அடுக்குக்காப்பு சோ 1
				வெ சலங்கை சோ 1
14900	10	9		வெ பழைய பாதசரம் சோடி 1 [சோ 1
14912		8		இ கல் வில்லுக் கடுக்கன்
14918		10	04	தங்க காப்பு சோடி 1
14923		22		தங்கப்பவுண் 2
14956	11	10		தங்கப்பவுண் 1
14973		50		குண்டுச்சங்கிலி 1 கொ இ
14975		100		ஓப்பின் காப்பு சோடி 1
14989		11		கைவிலங்கு 1
15019	12	6		சிறு திருகுபூ 1
15020		23		கைச்சங்கிலி 1
15022		5	50	இமிற கல் மோதிரம் 1
15043		6		கொப்புச்சிமிக்கி சோடி 1
15052	13	10		தோடு சோடி 1
15055		10	04	ஒற்றைக்கல் செருகுதோடு சோடி 1
15098		20		இமிற் கவுத்தோர் 1, சிறு திருகுபூ 1, வெ எஸ்கறணை சோடி 1
15158	14	14		இ கல் காதோலை சோ 1
15164	15	13		வெ பாதசரம் சோடி 1
15 81		12		சிறு கைச்சங்கிலி 2
15182		40	04	கம்பிப்பூரானட்டியல் 1
15192		30		கல் கவுத்தோர் 1
15201		12		பத பொன் சறடு 1
15209	16	9	04	ஒற்றைக்கல் செருகுதோடு சோடி 1
15215		15		தங்கு காப்பு சோடி 1
15223		7		மூக்குமுடன் படைகூர் 1
15236		37	50	பட்டக்காப்பு சோடி 1
15241	17	35		கல் வைத்த செடிக் காப்பு சோடி 1
15249		25		வெ எஸ்கறணை சோடி 1, பொன் கம்பிப்பூரானட்டியல் 1
15266		18		பொற்சறடு 1
15267		6		வெ குழற்காப்பு சோ 1
15270	17	13		பத சவுக்கமணி 1க்கு மணி 24
15280		15		இ கல் காதோலை சோடி 1
15323	18	28		இ கல் காதோலை சோடி 1
15328		50		சிறு சங்கிலிச் சோடி 1
15346		40	04	தங்க காப்பு சோடி 1
15358		55		ஓப்பின் காப்பு சோடி 1
15364		15		கைவிலங்கு 1 வெ எஸ்கறணை சோடி 1 வெ கறணை சோடி 1
15375	19	10		தங்கப்பவுண் 1
15376		10		குவை தங்கப்பவுண் 1
15381		8	04	வெ தண்டை சோடி 1
15382		45		சோப் பூவுடன் [illegible] பட்டு மணி 1
15383		25	04	தங்கப்பவுண் 1 கற் கொப்புச்சிமிக்கி சோடி 1
15397		10		தங்காப்பு சோடி 1
15405		170		சவடியுடன் மகிழம்புக் சோடி 1
15406		18		பொன்பட்டக்காப்புசோ 1
15409		6		கொப்புச் சிமிக்கி சோடி 1
15418		11		மோதிரம் 1
15433	20	35		கம்பிப்பூரானட்டியல் 1
15437		8	04	செவ்வந்திக் திருகுபூ 1 இ கல் புருசு 1
15440		20		வெ அடுக்குக்காப்பு சோ 1 வெ 2பட் டரைஞாண் 1
15467		50		இ டி சங்கிலியட்டியல் 1
15483	21	46		பட்டக்காப்பு சோடி 1 வெ எஸ்கறணை சோடி 1
15501		70		கூடுடன் முடிச்சுச்சங்கிலி 1
15502		25		அரைப்பவுண் 2 உடன் பத சவுக்கமணிக்கோர்வை 1
15535		12		½பவுண் பொத்தான் 2
15539	22	25		ஜந்துபட்டு மணி 1
15550		50	04	டைமன் காப்பு சோடி 1 பூமு இ எஸ்காப்பு சோடி 1 பூமு இ கல்
15551		30	04	தங்காப்பு சோடி 1
15567		15	04	மு பி பத சவுக்கமணிக் கோர்வை 1
15573		14	04	இ கல் கவுத்தோர் 1
15586		11		குவை தங்கப்பவுண் 1
15592	23	7		வெ அடுக்குக்காப்புசோடி 1
15593		14		வெ அடுக்குக்காப்புசோடி 1
15599		9		வெ அடுக்குக்காப்புசோடி 1
15606		10	04	மோதிரம் 1
15624		55		ஓப்பின்காப்பு சோடி 1
15625		10	04	தங்கப்பவுண் 1
15669	24	8		மணியட்டியல் 1
15673		11		மோதிரம் 1
15684		5	50	உவாட்ஸ் லைவிலங்கு 1
15693		20		தங்க அரைஞாண் 1 கொ இ
15712		6	04	மேலிடு சோடி 1
15731		35		டி கம்பிப்பூரானட்டியல் 1
15735		35	04	குண்டுச்சங்கிலி 1
15746		15	04	பத சறடு 1
15762	26	14		வெ பாதசரம் சோடி 1
15767		65	04	எஸ் சங்கிலியட்டியல் 1 இருதயமுடன் குண்டுசங்கிலி 1
15775		9		கொப்புச் சிமிக்கி சோடி 1 வெ எஸ்கறணை சோடி 1
15783		13		இ கல் கவுத்தோர் 1
15800	27	55		டி எஸ் அட்டியல் 1
15809		10		வெ அடுக்குக்காப்பு சோ 1
15812		60		பொன் 5பட்டிலைமாலை 1
15826		18		பொன் தாலிக்கொடி 1
15867	28	6		சிறு திருகுபூ 1
15869		17		வெ பாதசரம் சோடி 1
15870		130	04	குண்டுவைத்து வேலை செய்த 10 டவர் ராணயம் 1ம் தங்கப்பவுண் 2ம் அரைபவுண் 5உடன் சங்கிலி 1
15874		55		அலுக்குத்து 22 தாலித் தட்டு 8
15888		15		மு இ பத சவுக்கமணிக் கோர்வை 1
15914	29	10		வெ அடுக்குக்காப்புசோடி 1
15916		70	04	கூடுடன் சங்கிலி 1
15923		46		முரிசுகட்குத்தியட்டியல் 1
15937		15		பத சவுக்கமணிக் கோர்வை 1 [ப்பிள்ளை
15941		80	04	ஓப்பின்காப்பு சோடி 1 முக
15966	30	21		கைச்சங்கிலி 1
15974		55		பத கம்பிப்பூரானட்டியல் 1 சிறு திருகுபூ 1
15986	31	60	04	1பட்டிலைமாலை 1
15991		33		உட்கட்டு 1க்கு தட்டு 17
16001		18		பொன் ஒருபட்டிலைமாலை 1
16013		6		வெ தண்டை சோடி 1
16033		11		இமிற்கல்லுக்கன் சோடி 1

விற்பனவு:—பிரசோற்பத்திஷு ஐப்பசிமீ 1-ம் திகதிக்குச்சரியான (17-10-31) சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் எடுபட்ட நகை பிறகிங்களாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த எலத்தில் விற்கப்படும்.

வி. பொ. விசுவநாத உடையார்,
வெர்தீஸ்மேனேஜர்.

(Mis. 375. 1 & 5)

(Mis 347)

சைவக்கிரியை விளக்கம்.

—o:—

சைவசமயக் கிரியைகளின் இயல்பையும் அவற்றைச் செய்யும் முறையையும், செய்வதற்குக்காரணத்தையும் இந்நூல் தெளிவாக எடுத்துக் கூறுவது. சைவசமயவியல், கிரியையுறுப்பியல், தீட்சையியல், விரதவியல், கோயிலியல், அபரக்கிரியையியல் என ஆறு இயல்களைக் கொண்டுள்ளது. இதனை இலகுவான தமிழ் வசனநடையில் எழுதியவர் ஸ்ரீ சு. சிவபாதசுந்தரமவர்களேயாம். இதன் விலை சதம் 25 (அணா ச) இந்துசாதன ஆலயத்திற் பெறலாகும்.

மானேஜர்,
இந்துசாதனம்.

வண்ணார்பண்ணை,
1—10—31.

இந்தியச் செய்தி.

காந்திஜியின் லான்காஷையர் விஜயம்.

லண்டன் 26-9-31.

காந்தியார் லான்காஷயரிலே இன்று சாயந்தரம் ஆறுதல் அடைகின்றார். இனிமேல் அவர் பருத்திவியாபாரத்தலைவர்களையும் மான்செஸ்டர் வர்த்தக ஸ்தானத்தின் அக்கிராசனரையும் சந்திப்பார். பத்திரிகை நிருபர்களுக்கு அவர்கூறியது, தாம், வரவேற்ற உபசாரங்களினால் பெருமிதம் அடைந்ததாகவும், ஆனால் அங்கு இருக்கும் தரித்திரத்தைக் காணும்தோறும் தம்மனம் மறுகிறதெனவும், அங்கு நிகழுந்தொழிலின்மையின் காரணத்தில் தாமும் பரிதாபப்பற்றவேண்டி வந்ததையிட்டு மிக வருந்துவதாகவும் கூறினார். ஆனால் தனது நோக்கம் வேண்டுமென்று தரித்திரத்தையும் தொழிலின்மையையும் உண்டாக்கியதலைவர்தலின் தாம் கொஞ்சம் மன ஆறுதலடைவதாகவும், தாம் எடுத்துக்கொண்ட வழிவகை உலகத்திலே தொழிலற்ற சேனைகளுள் மிகப்பெரிய சேனையாகிய பட்டினிகிடக்கும் கோடிக்கணக்கான ஏழைமக்களுக்கு ஆறுதலும் விடுதலையும் கொடுப்பதற்காகவேயெனறும் கூறினார்.

இந்தியாவடைந்திருக்கும் தரித்திரத்துடன் லான்காஷயர் அடைந்திருக்கும் தரித்திரத்தை ஒப்பிட்டுப்பார்ப்பதேயானால் இது மிகவும் இலேசானதென்றும் கூறினார்.

இந்தச் சங்கடங்களிலிருந்து மீண்டு கொள்வதற்கு ஒருவழி கண்டுபிடித்தற்காகவே தாம் இங்கிலாந்துக்கு வந்ததாகவும் இன்று தம்முடன் ஒத்துழைக்க உடன்படுவார்களெனத் தாம் நம்புவதாகவும் சொன்னார்.

லான்காஷயரிலுள்ள தொழிலின்மையை நீக்கத்தமால் முடியவேயானால் தாம் பெரும் ஆக்கமடையக் கூடுமென்றும் குறிப்பிட்டார்.

27-9-31.

16 பருத்தித்தொழிலாளிகளுடனும், வியாபார இக்கியசங்கத்தவர்களுடனும் காந்திஜி இரண்டுமணிநேரம்சம்பாஷணை செய்து தமது நிலையை நன்கு விளக்கியுள்ளார்.

நல்நூற்றல் சனசமூகவாழ்க்கைக்கும் பொருளாதாரத்திற்கும் அநுகூலமான ஒருஇயக்கமென்றும், பொதுசனங்களின் நிலைமையை வேறுவழிவகைகளினால் கன்னிலைப்படுத்தும் வரையில் அந்தவேலை தொடர்ந்து நடைபெறவேண்டுமென்பதையும் தெளிவுற விளக்கினார்.

காந்திஜியின் நிலை நன்கு விளங்கிக் கொள்ளப்பட்டதென்றும், சம்பாஷணை நிகழுங்காலத்தில் இருந்த கபடமற்ற அநுதாபமுடைய நிலைமையைக்கொண்டு இனிமேல் உத்தியோக முறையில் விஷயங்களை அளவளாவிக்கொள்ள வழிதிறக்கப்பட்டிருக்கின்றதெனத் தான் நம்புவதாகவும் மிஸ்டர் பார்லோ ரூய்ட்டர் பிரதிநிதிக்குத் தெரிவித்தார்.

27-9-31.

லான்காஷயரின் பலபாகங்களிலுமிருந்து பெண்கள் உட்பட பருத்தித் தொழிலாளர்களை வரவேற்றதிலேயே 'வெஸ்ற்பிறுக்வோட்' என்னும் இடத்தில் சாயந்தரம் முழுவதும் காந்திஜி செலவு செய்தார். இத்தொழிலாளர்கள், இப்போதிருக்கும் மிடி நீடிப்பதேயானால் உலகம் முழுவதையும் அது பாதிக்கும் என்ற பயம் இருக்கிறதெனத் தெரிவித்தனர்.

காந்திஜி அவர்களுக்குத் தமது அநுதாபத்தைக்கூறி இந்தியாவுக்கும் லான்காஷயருக்கும் இடையிலுள்ள நிலைமைகளின் பேதத்தாம் இந்தியாவில் மிகக் கூடியதாகவிருப்பதால் அவர்களை நன்னிலைப்படுத்துவதையே தாம் முதலாவதாக அவதானிக்க வேண்டியிருப்பதாகக் கூறினார்.

27—9—31

வெஸ்ற்பிறூற்வோட் என்னும் இடத்தில் காந்திஜி இன்று ஒரு பிரதானமான வாய்ப்பிறப்பைக் கூறினார்.

இப்போது இங்கிலாந்திலே நிகழும் ஆராசிய நிலைமையினால் இந்தியப்பிரச்சனையை நிர்த்துக்கொள்ளும் வழிவகைக்குத் திறந்து விளையுமென்று அவர் நினைக்கின்றனரோ வெனக் கேட்டதற்கு உத்தரமாகக் காந்திஜி கூறியது,

"தங்களுடைய உள்நாட்டுநிலைமைகளைச் சீர்ப்படுத்துவதற்கு இந்தியாவுடன் ஒரு கல்லிணக்கத்தீர்மானஞ்செய்துகொள்வது அவசியமல்லவெனப் பிரித்தானிய ராசியதந்திரிகள் நினைத்தால் அப்படி முடியலாம். இந்தியாவை உதறித் தள்ளிவிடலாமென்று அவர்கள் நினைத்தால் நிலைமை கச்சயமாக நிகழும்" என்றுகூறினார்.

தொடர்ச்சி 2-ம் பக்கம்

நவராத்திரி எப்பொழுது?

சென்ற பல வாரங்களாகச் "சிவதேசன், பத்திரிகையில் ஆதிசைவப் பேரறிஞர்கள் பலரும் ஏனையோரும் நவராத்திரி நிர்ணயத்தைப்பற்றி வெளிவிட்டுள்ள கட்டுரைகள் பலவற்றை மிக்க ஆவலோடு நான் படித்தறுண்டு. ஆவணி பிறநிபிற் றொடங்கிப் புரட்டாசி முதலில் முடிப்பதற்கும், புரட்டாசி பிறநிபிற் றொடங்கி ஐப்பசி முதலில் முடிப்பதற்கும் பற்பல காரணங்கள் கூறப்படுகின்றன. நிருமெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தினர் முற்கூறியவாறே நடத்தல்வேண்டுமென்ற அறிக்கையையும், அல்லறிக்கைக்கு ஆதாரமாகப் பல காரணங்களையும், ஆமலிகளையும் "செந்தமிழ்ச் செல்வி"யில் வெளிவிட்டுள்ளார்கள். நவராத்திரி யென்பது ஒரு குறித்த மாதத்தில் அமாவாசைக்கடுத்த பிரதமை முதல் நவமிவரை ஒன்பது ராத்திரிகளில் அம்மையை வழிபடும் ஒரு விரதமாகும். இவ்வொன்பது ராத்திரிகள் எவையெனத் தீர்மானிப்பதில் பலவகையான சந்தேகங்கள் தோன்றலின்றன. தொடக்கம் முக்கியமா, இறுதி முக்கியமா, இவற்றுள் எதற்குக் காலநிர்ணயவிதி ஏற்பட்டுள்ளது, ஒன்பது நாள் விரதத்தின் இடையே வியாகூல சதுர்த்தி வருதல் கூடுமா, கேதாரவிரதம் இடைப்படுதல் கூடுமா என்பன போன்ற பல சேர்விகள் இக்கால நிர்ணயத்தின்கண் எழுகின்றன. ஒரே ஆமவாக்கியத்தை இருகட்சியாரும் இரண்டு வகையாகப் பொருள் செய்து வாதிப்பது கண்கூடு. இத்தகைய கருத்து வேறுபாடு நிகழுங் காலத்தில், ஆமவுரைகளோடமையாது, இவ்விதம் பண்டைக்காலத்தில் அநுட்டிக்கப்பட்டதா, பின்னர் எவ்வகையிலேனும் மாறுபாடுற்றதா, இப்போது எவ்வாறு அநுட்டிக்கின்றனர், தமிழ்நாட்டில் இது எவ்வாறு அநுட்டிக்கப்படல்வேண்டும் என்ற விஷயங்களையும் கேள்விகளையும் நன்காராய்ந்து ஒரு முடிபுக்கு வருதலே சாலச் சிறந்த முறையாகும்.

நமது தமிழ்நாட்டில் தற்காலத்தில் பெரும்பகுதியினரால் கொண்டாடப்படும் விழாக்களும் விரதங்களும் இருவகைப்படும். அவற்றுள் ஒருவகை சிறப்பாகத் தமிழ்நாட்டில் மட்டும் வழங்கும் விழாக்களும் விரதங்களும் ஆகும். மற்றொருவகை தமிழ்நாட்டில் மட்டுமன்றி இந்தியாவின் ஏனையபகுதிகளிலும்வழங்கும் விழாக்களும் விரதங்களும் ஆகும். இவற்றுள் முதற்பகுதியைச் சேர்ந்தவை கார்த்திகை விளக்கீடு, மார்கழித் திருவாதிரை, தைப்பூசம், மாசிமகம், பங்குனியுத்தரம், ஆடிப்பூரம் என்பனவும் பிறவுமாம். இவற்றுள் திருவாதிரை உத்தரம் நீங்கலாக மற்றவை சைவர்களேயன்றி வைணவர்களாலும் சிறப்பாகக் கொண்டாடப்படும் விழாக்கள் என்பது சொக்கத்தக்கது. பிற்பகுதியைச் சேர்ந்தவை விநாயக சதுர்த்தி, மஹாநவமி, தீபாவளி, மஹாசிவராத்திரி என்பனவும் பிறவுமாம்

இவ்விருவகை விழாக்களுள் கார்த்கை விளக்கீடு முதலிய முற்பகுதியைச் சேர்ந்த விழாக்களின் நிர்ணயத்தைப்பற்றி எப்போதும் ஏதொரு சர்ச்சைகளும் நிகழ்வதில்லை. அவைகள் அந்தந்த சௌரமான மாதங்களில் அந்தந்த நக்ஷத்திரங்களில் கொண்டாடப்படும். ஒருமாதத்திலேயே ஒருகுறித்தநக்ஷத்திரம் இருமுறை வரநேரிட்டால், பின்னதுவரும் நாளிலேயே குறித்தவிழா கொண்டாடப்படும். இதிலிருந்து இத்தனித் தமிழ்விழாக்கள் சௌரமான மாதத்தையும் நக்ஷத்திரத்தையுமே ஒட்டி வருகின்றனவென்பதும், சாந்திரமான மாதத்தையாவது திதியையாவது ஒட்டி வருவனவல்ல வென்பதும் நன்கு புலனாகும். தைப்பூசம், மாசிமகம் என்ற சௌரமான மாத நக்ஷத்திரச் சேர்க்கைச் சொற்றொடர்கள்போல சாந்திரமான மாத திதிச்சேர்க்கைச் சொற்றொடர் (உதாரணமாக சைத்திரபௌர்ணமி, ஆஷாடஏகாதசி) ஏதுவும் தனித் தமிழ்விழா எவையுங் குறிக்கும் வழக்கு இத்தமிழ்நாட்டில் அன்றும் இன்றும் என்றும் இல்லையென்பதும் மேற்கூறிய உண்மைக்குத் துணைசெய்யும் பெரியதொரு சான்றாகும்.

தமிழ்நாட்டில் இவ்விதி விழாக்களைக் குறிப்பதற்கு மட்டுமே யன்றி வேறு பலவகைச் சடங்குகளைக் குறிப்பதற்கும் கையாளப்படுகின்றது. ஈண்டு சில உதாரணங்கள் காட்டுதும்; ஒரு குழந்தை பிறந்தால் அது பிறந்த சௌரமான மாதத்தையும் நக்ஷத்திரத்தையுமே குறித்துக் கொண்டு அடுத்த ஆண்டில் அம்மாதத்தில் அந்நக்ஷத்திரம் வரும் நாளில் முதல் ஆண்டு நிறைவு என்ற கொண்டாட்டம் தமிழ் நாடெங்கணும் நடைபெறுன்றது. இதில் சாந்திரமான மாதம் திதி குறிக்கப்படவில்லை. மலையாளத்தில் இனிஞர் முதியோர் என்பதின்றி அனைவரும் தாம் தாம் பிறந்த சௌரமான மாதங்களில் தாம் பிறந்த நக்ஷத்திர நாட்களில் ஒவ்வோராண்டிலும் பிறந்த நாட்கொண்டாடும் வழக்கம் இன்றும் நிலைத்துளது. இதிலும் சாந்திரமான மாதம் திதி குறிக்கப்படவில்லை. இறைவன் திருவடி நீழலடைந்த பெரியோர்களின் திருநக்ஷத்திரங்களை, சௌரமான மாதம் நக்ஷத்திரம் என்ற முறையிலேயே கொண்டாடுகிறோமேயன்றி சாந்திரமான மாதம் திதி யென்ற முறையில் கொண்டாடுவதில்லை. "சித்திரைச் சதயம் அப்பர்" என்ற பாட்டிற் கூறப்படும் சமய குரவர் திருநக்ஷத்திரங்களும், சந்தான குரவர் திருநக்ஷத்திரங்களும், [illegible]றபத்து மூன்று நாயனமார்கள் திருநக்ஷத்திரங்களும் இம்முறையையே வலியுறுத்தும். இறைவனடி சேர்ந்த நக்ஷத்திரத்தை விடப் பிறந்த நக்ஷத்திரம் முக்கியம் என்ற முறையை அநுட்டிக்கும் வைணவர்களும் ஆழ்வாராதிகள் நிம்மாளுதிபதிகள் திருநக்ஷத்திரங்களைக் கொண்டாடுகிறார்களே யொழிய சாந்திரமான மாதம் திதிகளைக் கொண்டாடுகின்றிலர். அறபதாம் ஆண்டுக் கொண்டாட்டம் என்ற சஷ்டிஅப்த பூர்த்திச் சடங்குக்கும் சௌரமான மாதமும் நக்ஷத்திரமுமே கொள்ளப்படுகின்றன. இவைகளின்றி வைதிகச் சடங்குகளிலும், திருக்கோயில்களில் நடத்தப்படும் அர்ச்சனை, அபிஷேகம், உத்ஸவம் முதலியவைகளிலும், நடத்தும் கர்த்தாவின் பிறந்த நக்ஷத்திரமே சங்கல்பத்தில் ஓதப்படுகிறதன்றி திதி ஓதப்படுவதில்லை. தற்காலத்தில் ஆரியப் புரோஹிதர்களின் உதவி கொண்டு தமிழ் மக்கள் நடத்தும் "சிரார்த்தம்" "தர்ப்பணம்" முதலிய கிரியைகளில் மட்டும் திதியை யொட்டிய சடங்குகள் நிகழ்கின்றன. ஈண்டும் சாந்திரமான மாதம் நழுவப்படுவதில்லை. இவைகள் தவிர மற்றெல்லா விஷயங்களிலும் தமிழ் நாட்டில் சௌரமான மாதமும் நக்ஷத்திரமுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

கார்த்திகை விளக்கீடு முதலிய முற்பகுதியிற் கூறப்பட்ட விழாக்கள் தனித் தமிழ் விழாக்கள் என்பதில் எட்டுணை ஐயமுமில்லை. இவ்விழாக்கள் வடநாட்டிலும், பம்பாய் முதலிய மேலைத்திசை நாடுகளிலும், தமிழர் நாகரிகம் படியாத ஏனைய நாடுகளிலும்கொண்டாடப் போவதில்லையென்ற ஒரு சான்றே இதற்குப் போதியதாகும். மேலும் இவ்விழாக்கள் பல நூற்றாண்டுகட்கு முன்னரே பழைய தமிழ் நூல்களில் கூறப்பட்டுள்ளன. கார்த்திகை விளக்கீடு அகநானூறு முதலிய சங்க [illegible]ல்களில் விதந்து கூறப்பட்டிருக்கிறது. கார்த்திகை முதலிய விழாக்கள் திருஞானசம்பந்தர் அருளிச்செய்த "ஊர்பாவைத் திருப்பதிகத்தில்" கூறப்பட்டுள்ளன. சம்பந்தர் காலம் இற்றைக்கு 1300 ஆண்டுகட்கு முன்னர் என்பதைச்சரித்திர ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து முடிவுகட்டியுள்ளார்கள். எனவே, இன்றைக்கும், சிறப்பாக நிகழும் இவ்விழாக்கள் 1300 ஆண்டுகட்கு முன்னும் சிறப்பாக நிகழ்ந்தனவென்றும், இவை வேறு நாடுகளில் கொண்டாடப்படுவதில்லையென்றும் நாம் அறிதலால் இவைகள் தனித் தமிழ் விழாக்கள் என்ற துணிந்து கூறுதலில் இழுக்கொன்றுமில்லை.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்.)

(Y. 19. 28 9 31 to 27 9 32.)

ஆடம்பர வாழ்வா?

காந்தியடிகள் வெறுப்பு.

கப்பல் பிரயாணத்தில் சில சம்பவங்கள்.

ஸ்ரீமான் மஹாதேவ தேசாய் "யங் இந்தியா" பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகிறார்:—

(28-9-31-ன் தொடர்.)

திரும்பி வந்தபிறகு, இந்த இரவல் உடைப்பெட்டிகளைத் திருப்பிக் கொடுத்துவிடுவதாக நீங்கள் கூறவது, உங்களுடைய குற்றத்தைச் சிறிதும் குறைக்கக் கூடியதாயில்லை. அவைகளை நீங்களே வைத்துக்கொண்டிருக்கப்போகிறீர்கள் என்ற நான் கூறவில்லையே. ஆனால் இந்தச் தோற்பெட்டிகளெல்லாம் மறுக்காமல் நீங்கள் ஏற்றுக்கொண்டதைக் கொண்டு, வறுமையான வாழ்க்கை நடத்துவதாகவும், தனக்கென்று ஒரு பொருளும் வேண்டியதில்லையென்றும் நீங்கள் எடுத்துள்ள பிரதிஞைக்கு என்ன பொருள் கொண்டிருக்கிறீர்கள் என்பதைக் தெரிந்துகொண்டேன். வறுமைப் பிரதிஞையை நீங்கள் பூண்டிருப்பதால் உங்களுடைய சக்திக்கு மீறிய எந்தப்பொருளையும் நீங்கள் வைத்துக்கொண்டிருக்கக் கூடாது. இந்தச் சாமான்களிற் சில பழையனானவையென்றும், மிகுதியாகத் தங்களிடத்தில் மிடந்த சாமான்களையே நண்பர்கள் அளித்திருக்கின்றார்களென்றும் நீங்கள் கூறுகிறீர்கள். இப்படி நீங்கள் கூறுவது உங்களையே நீங்கள் ஏமாற்றிக் கொள்வதாகும்; அல்லது என்னை ஏமாற்றுவதாகும். உங்களுக்கு அளித்த நண்பாகளுக்கு இந்தச்சாமான்கள் அதிகமானவையாயிருந்தால், அவைகள், இவைகளைத் தூர எறிந்திருக்கவேண்டும். 'எங்களுக்கு இந்தச் சாமான்கள் வேண்டும்' என்று நீங்கள் அவர்களைக் கேட்டிராவிட்டால், அவர்கள் இவைகளை உங்களுக்கு அளித்திருக்க முடியாது. இவ்வொர்து அறுபவர்களை உடையவர்களின் ஆலோசனையைக்கேட்டு இவைகளை நீங்கள் கடந்ததாகக் கூறவது பெருந்தவறு. அப்படி அவர்கள் ஆலோசனையைக் கேட்டதாயிருந்தால் அவர்களுடனே நீங்கள் இருக்கவேண்டும். இப்பொழுது நீங்கள் என்னுடன் இருக்கிறீர்கள், ஆகவின் என்னுடைய ஆலோசனையை நீங்கள் கேட்கவேண்டும்."

இங்ஙனம் பல முறை அடிகள் எங்களுக்குச் சுட்டிக்காட்டினார். இவர்கூறிய வார்த்தைகள், எங்களுக்குத் கடல்நோய் வந்துவிடுவதுபோலிருந்தது. எனவே எங்களுக்குத் தேவையான சாமான்கள் [illegible] இன்னின்னவைகளென்று [illegible] தனியாக [illegible] இரண்டு ஜாபிதாக்கள் [illegible] வேண்டப்பட்டதாகவைகளை [illegible] ப்பி அனுப்பிவிடுவதாகத் தீர்மானித்தோம். இந்த வேலையைச் செய்துமுடிப்பதற்கு மூன்று நாளாயிற்று. நான்காம் நாள் எங்களுடைய ஜாபிதாக்களை காந்தியடிகளின் பார்வைக்கு அனுப்பினோம். எங்கள் அதிருஷ்டவசமாக எங்களுக்கு அவசியமானவை யென்ற பட்ட சாமான்களை யெல்லாம் வைத்துக் கொள்ளும்படி உறப்பட்டோம். அதுகூட, எங்களுடைய பலஹீனத்திற்கு ஈடுசெய்யும் பொருட்டுதான். "உங்களுடைய ஜாபிதாவில் நான் இப்பொழுது தலையிடப்போவதில்லை. சிம்லா வீதிகளில் நீங்கள் எப்படிச் செல்வீர்களோ அப்படியே லண்டன் வீதிகளிலும் செல்லவேண்டும் என்பதே எனது விருப்பம். அரைவேஷ்டியுடனும் மேல் குடுத்தாவுடனும், காலில் செருப்புடனும் நீங்கள் சிம்லா வீதிகளில் செல்லும்போது, லண்டன் வீதிகளிலும் அப்படியே நீங்கள் செல்லலாம் என்று உங்களுக்கு உறதி கூறுகிறேன். உங்களுக்குப் போதிய உடை இல்லையென்று தெரிந்தால், நானே சம்பளினை வாங்கிக்கொள்ளும்படி உங்களுக்குக் கூறுவேன். ஆனால் ஜனங்கள் என்ன சொல்வார்களோ என்ற போலி அச்சத்திற்காக, அரைவேஷ்டியுடனுமேல் குடுத்தாவுடனும் கூடாது; லைத்தக் கொண்டிருக்கவும் கூடாது. உங்களிடத்திலோ அல்லது என்னிடத்திலோ பெரிய, ஆடம்பரமான உடைப்பெட்டிகள் இருந்தால் அப்பொழுது நான் ஜனங்கள் பிரதிபலைவர்கள் என்ற உங்களுக்கு உறதி கூறுகிறேன்" என்று மீண்டும் எங்களுக்கு அடிகள் உபதேசம் செய்தார். அருகாமையில் ஒரு தோற்பெட்டி இருந்தது. இந்தப் பெட்டியை, கம்பெனியரே எங்களுக்குச் சன்மானமாக அனுப்பியிருந்தனர். அதைப் பார்த்து அடிகள் பின்வருமாறு கூறினார்:—"இந்தியாவிலிருக்கும்போது கதர்ப்பையை உபயோகிக்கும் நீங்கள் ஏன் அதை இங்கிலாந்திலும் உபயோகப்படுத்தக் கூடாது? இங்கிலாந்திலுள்ளவர் அனைவரும் இதே மாதிரியான தோற்பெட்டிகளிலேயே தங்கள் தஸ்தாவேஜுகளை எடுத்துச் செல்கிறார்கள் என்று நீங்கள் கருதுகிறீர்களா? ஒருகாலுயிலை லம்பார்ட் தெருவிலுள்ள பெரிய வியாபாரிகள், அல்லது லேவாதேவிக்காரர்கள் முதலியோர்கள் வீடத்திலேயே இத்தகைய பெட்டிகள் இருக்கும். அல்லது ஸர் தேஜ்பிரகாஶ் சாப்ருபோன்ற இராச தந்திரநிபுணர்களே தங்களுடைய தஸ்தாவேஜுகளை இத்தகைய பெட்டிகளில் எடுத்துச் செல்வார்கள். நீங்கள் இந்தப் பெட்டியை வைத்துக் கொண்டிருந்தால் அது கைப்புக்கிடமாயிருக்குமல்லவா?

அப்படியே, ஒரு நண்பர், தூரிருஷ்டிக் கண்ணாடியொன்றை எங்களுக்கு அளித்தார். ஏழைகளின் எளியவாழ்க்கைக்கு இஃது அரவணியம் என்று சொல்லி இதுவும் நிராகரிக்கப்பட்டது. கப்பற்பிரயாணத்தின்போது, மேற்றட்டில் அடிகளின் உபயோகத்திற்காக, ஒருநண்பர், அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு மடிப்புக் கட்டில அனுப்பியிருந்தார். அதைக் காந்தியடிகள் பார்த்தார். "ஓ! இஃதென்ன மடிப்புக்கட்டிலா? ஹாரி வினையாட்டுச் சாமானென்றன்றோ நினைத்தேன். இஃது எனக்கு எதற்கு? நான் எப்பொழுதாவது இதை உபயோகித்து நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?" என்று கூறினார். இச்சமயத்தில், போபால் நவாப்பின் பரிவாரத்தைச் சேர்ந்த ஜனுல்ஷைப்குவைரிஷி அவ்விடம்வந்து சேர்ந்தார். அவரைப் பார்த்த அடிகள் புன்னகைப்புடன், "நல்லது ஜனுப், போபால் மன்னரின் பரிவாரத்தில், ஏழுக்கேனும் காஷ்மீர் சால்வை தேவையிருந்தால் எனக்குத் தெரியுமுங்கள், எனக்காக, என் நண்பர்கள் கொடுத்த சால்வைகளைக்கொண்டு, நான் ஒரு சிறிய ஷாப்பு வைத்துவிடலாம் போலிருக்கிறது. இப்பொழுது என்னிடத்தில், ஒருமோதிரத்திற்குன் தழையக்கூடிய ஓர் அழகிய சால்வை இருக்கிறது. அஃது ஏழுநூறு ரூபா பெறுமானது. இந்தியாவின் ஏழைமக்களின் பிரதிநிதியாக நான், சர்வக்ட்சி மகாநாட்டில் அதைத் தரித்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணம்போலிருக்கிறது. போபால் மகாராணியார் இந்த உயரிய சால்வையை எடுத்துக்கொண்டு, ஏழைகளின் உபயோகத்திற்காக எனக்கு ஏழாயிரம் ரூபாய் கொடுத்துவிட்டும், ஏழைகளின் பிரதிநிதியாக இஃதொன்றையே நான் செய்யக்கூடும்." என்று பேசினார். இந்த வார்த்தைகளின் பயனாக நாங்கள் ஏடவிலிருந்து, ஏழு உடைப்பெட்டிகளையும் வேறுபல டிரங்குகளையும் திருப்பி அனுப்பி விட்டோம்.

கப்பல் பிரயாணத்தின்போது நடைபெற்ற அரியல் நிகழ்ச்சிகளைப்பற்றி நான் ஏதேனும் கூறப்போகுமாக வாசகர்கள் எதிர் பார்க்கலாம். பிரயாண ஆரம்பகாலத்தில் எவ்வித அரியல் சம்பவமும் நிகழவில்லை யென்று நான் உறதி கூறுகிறேன். ஆயினிக்கா அசோசியேட்டிரான் கிருபாளு ஸ்ரீமான் மில்ஸ், ஒருநாள் காலை காந்தியடிகளைக் கண்டு, தாம் நினைத்தோறும் ஏதேனும் ஒருகெய்தி யனுப்பிக்கொண்டிருப்பதாகக் கூறினார். "என்னுடைய கப்பல் பிரயாணம் சர்க்கோ ரகமாகவே ரணமடைந்து வருகிறதென்று நீங்கள் நினைத்தோறும் உங்கள் வாசகர்களுக்குத் தெரியத்தக்கொண்டு வருகிறீர்களா?" என்று புன்சிரிப்புடன் அடிகள் அவரைக் கேட்டார்.

பிரயாண[illegible] செய்வோரில், காந்தியடிகள் தான் [illegible] தோழர்களுடன் காலைவேளி[illegible] [illegible]து வகுப்பு வெளித்தட்டில் [illegible] தமக்கென்ற ஒதுக்கி[illegible] [illegible]க்கிறார். இரவு பகல் [illegible] [illegible] அவர் காலைமுதிக்கொண்[illegible] [illegible]ப்பார்த்து ஸ்ரீமான் [illegible] [illegible] விட்டவர்

மகாத்மாவின் சமாசாரம்.

லண்டன் 29-4-31

றெம்பிறுட்ற் சாலையிலே இந்திய மாணவர்கள் கேட்ட கேள்விகளுக்கு மஹாத்மா பதில் கூறினர். டக்டர் அன்சாரியை, வட்டமேசைச் சமாசத்தில் சேர்க்கவேண்டுமென்பதற்குச் சமாதானம் கூறுகையில், சுடர்த 40 வருடகாலமாகத் தமது தீவிரமான தீர்மானம், இந்து—முஸ்லீம் ஒற்றுமை உண்டாவதற்கு இந்துக்களே முற்றாக விட்டுக்கொடுக்க வேண்டியவர்கள் என்றும், இதற்கு முஸ்லீம்களுள் ஒற்றுமை வேண்டியதென்றும், இந்த விஷயத்தில் தமக்குப் பிடிவாதமான தீர்மானம் ஒன்று மில்லையென்றும், இந்தியாவுடன் அனுதாப சிந்தையுடைய ஐரோப்பியருட்பட எல்லாச் சிறுட்சியாளர்களின் எண்ணங்களும் ஏற்று அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றும் லாலா லஜபதிராயைப் பகைத்துக்கொண்டு வரும் அன்சாரியின் கட்சியையும் அனுசரிக்கவே வேண்டுமென்றும் மஹாத்மா கூறினர்.

சம்யுக்த அரசாட்சித் திட்ட வமைப்புச் சங்கப் பிரிவு லோட் பீல் அவர்களின் தலைமையில், வரி விதிக்கும் வழிவகைகளைப்பற்றியும், வரிப் பணத்தைப் பகிரும் வகையைப்பற்றியும் பரியாலோசனை செய்து, ராணைக் கூடவேதாக வைக்கப்பட்டிருக்கின்றது.

மஹாத்மா, லேடி ஹோர் (இந்திய மஹாமந்திரியின் பாரி) அவர்களையும், பின்னர் இந்திய மஹாமந்திரியாரையும் கண்டு அளவளாவினர். பின்பு, சிறுபான்மைக் கட்சியாளர்களின் பிரதிநிதிகளாகும் சர்தார் பூஜல்சிங் முதலானோருடன் சம்பாஷித்தனர்.

டக்டர் அன்சாரியையும், வ. மே. சமாஜத்திற்கு அழைக்கவேண்டுமென்ற விருப்பத்திற்கு முஸ்லீம்கள், தாம் டக்டர்அன்சாரியை அழைக்கும்படி அரசாட்சியாரைக் கேட்கப் பிரியமற்றவர்களாய்த் தோற்றினர். அரசாட்சியின்சுயேச்சைக்கு அதை விடுவதே நல்லதென நினைத்தனர் சிலர், மஹாத்மா சங்கத்திலே தனது அறிக்கையை கூறுமவரை பார்த்துச் செய்வது நல்லதென நினைக்கின்றனர். பரஸ்பரம் பேச்சு நடைபெறுகின்றது.

பலவிதச் செய்திகள்.

சீனதேசத்தில் அக்கியராட்டுமந்திரியாகும் டக்டர் C. T. வாங் என்பாரை மாணவர்கள் கூடிக்கொண்டு வாருனராயம் வரும்படி அடித்தனர். மன்ஜூறியாவைவிட்டு ஜப்பானியர் விலகியபொழுது அதை மேற்பார்வையிடும்படி ஒருகட்சியையும் சோராதாரை மத்தியஸ்தராய் அவர் நியமிக்கவில்லையென்பதுவே காரணமாகும்.

இந்திய ரூபாவின் விலையைப்பற்றி இந்திய அரசாட்சியார் எடுத்துக்கொண்ட தீர்மானத்தை மாற்ற முடியாதெனச் சேர் சாமுவல்ஹோர், பாராளுமன்றத்திலே கூறினர்.

டென்மார்க் தேசத்திலும் தங்கத்தின் ஸ்திரவிலை நீக்கப்பட்டது.

கனடாதேசம், அமெரிக்காவிலிருந்து வரும் வியாபாரங்களுக்காக ஒரு சட்டம் செய்திருக்கின்றனர் இது தங்கத்தின் விலை குறைந்தமையினாலேயே உண்டாயது.

சிங்கப்பூர் அரசாட்சியார் தமது வரவு செலவுத்திட்டத்தைச் சரிப்படுத்துவதற்கு இன்னும் 21500000 வெள்ளி குறைகின்றதென்கிறார்கள். ஆகையால் பென்ஷன் காரருக்கு கொடுத்த சமயோசிதப் பண உதவிகளும் நிறுத்தப்படுமென்றும், மண்ணெண்ணெய், புகையிலை, குடிவகைகளின் தீர்வையை ஏற்றிவிட வேணடுமென்றும் சட்டசபை தீர்மானித்தது.

பிரான்சிய அரசாட்சித்தலைவர்களாகும் M. லாவல், M. பிரியான்ட் ஆகிய இருவரும் ஜேர்மனியின் அரசாட்சித்தலைவராகும், வொன்ஹின்டன்பேர்க் அவர்களைச் சந்தித்தனர். இதனால் இவ்விரு இராச்சியங்களுக்கு மிடையேயிருந்த பகைமை முடிந்துவிட்டதாகக் கருதப்படுகின்றது

அக்கதானின் ஆகாய வசனிப் பிரசங்கம்.

இந்தியா விட்டு வெளியே வசிப்பவரும் இந்தியாவுக்கு வருவதானாலும் நெடுங்காலத்தினபின் ஒரு முறை அந்து மீளச் சொற்பகாலம் தங்கிச் செல்பவருமான அக்கதான் அவர்களின் பேச்சு ஒரு பக்கத்தைச் சார்ந்ததெனவும், அது சமாதானமான தீர்மானங்களை அடைவதற்கு வழிகாட்டுவதாயிராதெனவும், ஐரோப்பா அமெரிக்காவிலுள்ளார் அக்தப் பேச்சுகளைப் பேச்சளவிலேயே ஏற்றுக்கொள்ளக்கூடாதென்றும், பண்டிதமாளவையர், ஸ்ரீவரச சாஸ்திரி; ஜெயக்கார்; இராமச்சந்திராராவ்; டக்டர் மூன்ஜே; S. B. தம்பி ஆகியவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

ரூபாய் விஷயம்.

இந்திய ரூபாயின் விலையைப்பற்றி அரசினர் கொண்ட முடிவையிட்டு, காந்திஜீயும் மற்றும் பிரதான இந்தியப் பிரமுகர்களும் சேர் சாமுவல் ஹோரைப் பின்னும் ஒருமுறை சந்திப்பதற்கு ஒழுங்கு கடைபெறுகின்றது.

மஹாத்மா ஒக்டோபர் 4உ கன்றர்பரியென்னும் இடத்தைத் தரிசித்து அங்கு மன் ஹோலெற் ஹோன்ஸ்ஸன்னென்னும்குருவானவருடன் அன்றிரவு தங்குவார்.

பாராளுமன்றம் தாக்கப்பட்டது.

லண்டன், 28-9-31.

தொழிலற்ற தொழிலாளர்கள் 200000 பேர்வரையில் கைச்சாத்திட்ட ஒரு மனுப்பத்திரத்தைப் பாராளுமன்றத்தின் பொதுசன சபைக்குச் சமர்ப்பித்துவிட்டு, அச்சனங்கள் யாவரும் கூடிக்கொண்டு பாராளுமன்றத்துப் பட்டவர்த்தனர் சபையைத் தாக்க ஆரம்பித்தனர். இப்படி யவர்கள் செய்தமை தொழிலற்றவர்களுக்கு அரசாட்சியார்கொடுத்துக்கொண்டுவந்த பண உதவியை நிறுத்தினமையாலேயாம்.

மிக்க தொந்தரவாளவும் அலங்கோலமானவுமான செய்கைகளும் காட்சிகளும் நிகழ்ந்தன. குதிரைவீரராகும் பொலிசார் இத்தாக்கக்காரரைஎரித்தஉடைப்பொல்லினாற் தாக்கினர். 1000 பேர்வரையிற் றொழிலற்றார் பைத்தியம் பிடித்தவர்கள் போலப் பாராளுமன்றத்துள் ஆர்ப்பரித்துப் பிரவேசித்தனர்.

பொலிஸ்வீரர்களை அவர்களுடைய குதிரைகளினின்றும் இழுத்துக் கீழே விழுத்துவதற்கு அனேக ஆடவர்களும் பெண்களும் எத்தனித்தனர்.

தெருக்களில் சனமில்லாமல் பொலிசார் சில மணித்தியால காலத்தின்பின் தூரத்தினர்

நவராத்திரி எப்பொழுது.

8-ம் பக்கத் தொடர்ச்சி.

ஈண்டு ஆகமவிதியொன்று ஒருசிறு ஐயத்தை விளைவித்தல் கூடும். கடற்கரையோரமாயுள்ள தலங்களில் திதியையொட்டியும் உள்நாட்டுத் தலங்களில் நக்ஷத்திரத்தை யொட்டியும் இவ்விழாக்கள் நடைபெறவேண்டுமென்று ஒரு ஆகமம் கூறுகின்றது. இதை யொட்டிக் கார்த்திகையில் கார்த்திகை நக்ஷத்திரம், மார்கழித் திருவாதிரை, தைப்பூசம், மாசிமகம், பங்குனியுத்தரம் என்பவற்றைக்கொள்ளாது இம்மாதங்களில் வரும் பௌர்ணமியிலேயே இவ்விழாக்களைக் கொண்டாடுவது தற்காலத்தில் திருமயிலாப்பூர் கடற்கரைத் தலங்களின் வழக்கமாயிருக்கிறது. திருஞானசம்பந்தர் திருமயிலாப்பூருக்குச் சென்ற காலத்திலும் அது கடற்கரைத் தலமாகவேயிருந்ததென்பது "மட்டிட்டபுன்னையங் கானல்" "ஊதிரை வேலையுலாவும் உயர்மயிலை" என்ற குறிப்புக்களால் பூம்பாவைத் திருப்பதிகத்தி னின்றும் இனிது விளங்கும். ஆனால் திருஞானசம்பந்தர் அப் பதிகத்தில் தைப்பூசம், பங்குனியுத்தரம் என்ற கூறவிரு ரேயன்றிப் பௌர்ணிமையைக் கூறினரல்லர். எனவே மேற்கூறிய ஆகமவிதி சம்பந்தர் காலத்துக்குப் பிற்பியதொன்றாகும் என்ற ஊகிக்க இடமுண்டு. இதிலிருந்து மேற்கூறிய சௌரமான மாதம் நக்ஷத்திரம் தான் முக்கியம் என்றபொது விதிதான் பழையகாலத்தில் தமிழ்நாட்டில் நிலவியிருந்ததென்று கூறுவதில் பழுதில்லை.

இனி விநாயக சதுர்த்தி, மகாநவமி, தீபாவளி முதலிய விழாக்களைப்பற்றிச் சிறிது ஆராய்வாம். இவ்விழாக்கள் இக்காலத்தில் இந்தியா முழுமையும் கொண்டாடப்படும் விழாக்களாகவுள்ளன. இவை முதன் முதலாக எந்த நாட்டில் தோன்றி, பின்னர் எவ்வாறு பரவின என்பதற்குச் சான்றான் இருத்தல் வேண்டும். கல்வெட்டுக்கள் பட்டயங்கள் முதலியன வேறு பல விழாக்களுக்கு இருத்தல் போலவே இவைகட்கும் இருத்தல் கூடும். பழைய தமிழ் நூல்களிலாதல் சம்பந்தர் கூறும் பூம்பாவைப் பதிகத்திலாதல் இவைகளைப்பற்றிய குறிப்புக் காணப்படவில்லை. இவைகளைப்பற்றி முதன் முதலாகக் கூறும் தமிழ் நூல்கள் எவையென்பதும், ஆரிய நூல்கள் எவையென்பதும், அந்நூல்களின் காலவளையறை எதுவென்பதும் சரித்திர ஆராய்ச்சியாளர்க்குரிய விழுமிய பணியின்பாற் படும். இவற்றால் மகாநவமி நீங்கலாக ஏனைய விழாக்கள் வடநாட்டிலிருந்துதமிழ்நாடு போந்திருத்தல் கூடுமென்ற ஐயப்பாட்டுக்குச் சில காரணங்கள் உள்ளன. முகலாலதாக, இவைகள் மாத நக்ஷத்திரங்களன்றி, திதியை மட்டும் ஒட்டிக் குறிக்கப்படுவதே ஒரு காரணமாகும். இராமன், கிருஷ்ணன் என்ற ஆரியத் தெய்வங்களின் விழாக்கள் ஸ்ரீராம நவமியென்றும், கோகுலாஷ்டமி யென்றும், கூறப்படுதலைநோக்குக. இவற்றுள் கிருஷ்ண ஜனனத்தை ஆரியம் முதிர்ந்த ஸ்மார்த்தர்கள் அஷ்டமியிலும், தமிழ் முதிர்ந்த வைணவர்கள் ரோகிணி நக்ஷத்திரத்திலும் கொண்டாடும் விசித்திரத்தையும் நோக்குக. மற்றும், ஆரிய விரதங்கள் குறிக்கப்பட்ட ஆனந்தபோதினி பஞ்சாங்கம்போன்ற ஒரு பஞ்சாங்கத்தைப் பார்த்தால் சித்திரைமீ முதல் பங்குனிமீ வரை கிருஷ்ணாஷ்டமி சதுர்த்தசி, கந்தாசப்சமி அந்காரக சதுர்த்தி, ரம்பாதிரிதியை, ரதயாத்ரா தசியை, நாக பஞ்சமி, கருட பஞ்சமி, கஜ ஜாலிதிரிதியை; ரிஷிபஞ்சமி, சம்பாஷஷ்டி, தூர்வாஷ்டமி, கந்தலமி, லலிதாபஞ்சமி, உத்தான ஏகாதசி, பாஷாண சதுர்த்தசி, மதன பஞ்சமி, பீஷ்மஏகாதசி (இவைகள் இவ்வாண்டு ஆனந்தபோதினி பஞ்சாங்கத்திற் கண்டவை) முதலிய பல விரதங்களும் விழாக்களும் குறிக்கப்பட்டுள்ளமை புலனாகும். இவைகள் சௌரமான மாதமும் நக்ஷத்திரமுமின்றி திதியையும் கடவுளர் முனிவர் முதலியோர் பெயர்களுள் ஒன்றையும் பிணைத்துச் சொல்லும் வழக்கை அநுசரித்தனவாகவுள்ளன. இவ்விரதங்களில் ஒன்றையேனும் தமிழ் நாட்டினர் அநுஷ்டிப்பதில்லை.

விநாயக சதுர்த்தி முதலிய விரதங்கள் வடநாட்டிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்திருத்தல் கூடும் என்ற கொள்கைக்கு மற்றொரு காரணமும் உண்டு. அது பூம்பாவைத் திருப்பதிகத்தில் இவை ஓதப்படாமையேயாம். இப்போது தமிழ்நாட்டில் சுயமரியாதைக் கொள்கையினர் தவிர ஏனையோர் இல்லங்களிலெல்லாம் கார்த்திகை தீபம், தைப்பூசம் முதலியவற்றைவிட விநாயக சதுர்த்தி ஒவ்வொருவராலும் சிறப்பாக அநுஷ்டிக்கப்படுவது நாம் அறிந்ததொன்று. இத்தகைய சிறப்புடைய விழாவை சம்பந்தப் பெருமான் கூறாது விட்டிருப்பாரா? சம்பந்தப் பெருமான் எல்லா விழாக்களையும் குறிக்க வேண்டுமென்ற சங்கல்பத்தோடு பூம்பாவைப் பதிகம் அருளிச் செய்யவில்லையெனக் கூறுதல் இவ்வினாவுக்குத் தகுந்த விடையாகுமா? இல்லையெனின், சம்பந்தர் காலத்தில் இவ்விழா தமிழ் நாட்டிலில்லையென்பதில் என்ன தவறுளது? மேலும் பழைய தமிழ் நூல்களில் விநாயகர் காப்புச் செய்யுள்களும் விநாயகரைப்பற்றிய குறிப்புக்களும் காணப்படாமையும் திருவாசகத்தினுள்கூட விநாயகர் கூறப்படாமையும், தேவாரங்களிலும் முருகவேளைப்போல் விநாயகர் அத்துணை மிதந்தியாகக் கூறப்படாமையும் இவைகள் போன்ற வேறு பல காரணங்களையும் கொண்டு திருவாசகத்துக்குப்பின் தேவாரகாலத்துக்குச் சிறிது முன்புதான் விநாயகர் வழிபாடு தமிழ்நாட்டில் புகுந்ததென்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றதையும் நோக்கவேண்டும். எனவே விநாயக சதுர்த்தியும் தேவாரகாலத்துக்குப்பின்னரே தமிழ்நாட்டில் கொண்டாடப்பட்டது என்று ஒருவாறு கூறலாம்.

ஆனால் மகாநவமியைப்பற்றி மட்டும் எனக்கொரு பெரிய சந்தேகம் உண்டு. பூம்பாவைப் பதிகத்தில்சம்பந்தர் "ஐப்பசி ஓணவிழா" என்று குறித்தது இவ்விழாவாகவே யிருத்தல் கூடுமென்பதே அது. சார்திரமான அதிமாசம் வருங்காரணத்தால் ஐப்பசிமாதத்தில் மகாநவமி என்று பல பஞ்சாங்கங்கள் குறிக்கும்போதெல்லாம் (அதாவது மூன்றாண்டுகட்கொருமுறை) இந்த சந்தேகம் என்னுள் புத்துயிர் கொண்டெழுவது வழக்கம். ஐப்பசி மாதத்தில் பௌர்ணிமையில் அசுவினிநக்ஷத்திரம் கூடிவருவதால் தான் அம்மாதத்துக்கே அப்பெயர் வந்துளது. பௌர்ணிமையன்று அசுவினியாயின் அதற்கு ஆறாட்டுக் முக்கிய நவமியில் அசுவினிக்கு ஆறு நக்ஷத்திரங்கள் முக்கிய ஓணம் வருவது இயல்பு. சாதாரணமாகப் பெரும்பாலும் ஐப்பசி ஓணமும் வளர்பிறை நவமியும் ஒன்றியே வரும். இவ்வாண்டிலும் ஐப்பசிமீ உ-ந் தேதியன்று அவ்வாறே வருதல் காண்க.

மேலே கூறிய பல காரணங்களினால் சௌரமான மாதத்தையும் நக்ஷத்திரத்தையுமே பொருந்திக் கூறப்படும் ஐப்பசி ஓணவிழாவானது தனித்தமிழ் விழாவேயென்று ஊகித்தலில் இழுக்கில்லை. கார்த்திகைவிளக்கே; தைப்பூசம் முதலியவற்றைப் போல் இவ்விழாவும் சிறப்பாக இருந்ததினாற்றான் திருஞானசம்பந்தரும் பூம்பாவைப் பதிகத்தில் இதைக்கூறினர்போலும்.

கடவுளை அம்மையாக வைத்து வழிபடுதல் தமிழ்நாட்டிலுள்ள மிகப் பழையதொரு முறையாகும். பல சங்கநூல்களில் கடவுளை அம்மையாகக் கருதும் வழக்கம் காணப்படுகின்றது. இவ்வழிபாடு வடநாட்டிலிருந்தே இங்கு வந்ததெனத் துணிந்து கூறவியலாது. ஐப்பசி ஓண விழாவானது மூன்று ஆண்டுகட் கொருமுறை சாந்திரமான கணிதப்படி நிகழும் மகாநவமியோடு ஒன்றிவருதலால் இவ்விழா அம்மைவழிபாட்டு விழாவாகவே யிருத்தல்கூடும் என்று ஊகிக்க இடமுண்டு. தமிழ்நாட்டு ஐப்பசி ஓண விழாவில் நிகழ்ந்த அம்மை வழிபாட்டைப் பார்த்த வடநாட்டினர் ஐப்பசி ஓணத்துக்குச் சரியான சார்திரமான ஆஸ்வீய சுக்கில நவமியில் அவ்வழி பாட்டை நடத்திவந்திருத்தல் கூடும். பிற்காலத்தில் ஆரியப் புரோஹிதர்கள் ஆரிய நிராவிடச் விவாகாரியர்கள் மூலமாக இவ்விழாவின் தனித்தமிழ் ஐப்பசி ஓண நிர்ணயமுறை மாற்றப்பட்டு, பத்திரிகைகளிலும் ஆகமங்களிலும் சார்திரமான திதிமுறை தழைக்கப்பட்டிருத்தல் கூடும்,

சென்றது செல்க. இனி நாம் செய்யவேண்டுவது யாது? ஒரு ஒழுங்கின்றிச் சில கோயில்களில் ஆவணியிறுதியிலும் சில கோயில்களில் புரட்டாசியிறுதியிலும் தொடங்கி நவராத்திரி ஜய டுத்தல் நிறைந்த முறையாகாது. எல்லாக் கோயில்களும் ஒரு வழியேதான் செல்லுதல் நன்மையை விளைவிக்கும். இந்த விஷயத்தை ஆகமவிதிகளைக்கொண்டே முடிபுகட்டி விடுதல் கருத்து வேற்றுமையறவே அகிகரிக்கும். எனவே மேற்கூறும் பொருள்களையெல்லாம் நன்றாய் ஆராய்ந்த பிறகே முடிபு காணுதல் ஒழுங்காகும்.

(1) நவராத்திரி விழாவுக்கும் ஐப்பசி ஓண விழாவுக்கும் [illegible]

(2) நவராத்திரி வடநாட்டுவிழாவா? தனித்தமிழ் விழாவா? (கல்வெட்டு முதலிய சரித்திரச் சான்றுகளுண்டா?)

(3) வடநாட்டு விழாவாயின் எந்த நிர்ணய முறையைத் தமிழ்நாட்டினர் கொள்ளவேண்டும்?

(4) தனித்தமிழ்விழாவாயின் எந்த நிர்ணய முறையைக் கொள்ளவேண்டும்?

(5) நிர்ணயத்தில் தொடக்கம் முக்கியமா இறுதி முக்கியமா என்பதை எவ்வாறு ஆராய வேண்டும்?

(6) இவ்விரதத்தின் இடையில் விநாயகர் சதுர்த்தி, கேதாரவிரதம் முதலியன வருதல் கூடுமா கூடாதா?

என்ற நிலைப்புகளையும் இவைபோன்ற வேறு சில நிலைப்புக்களையும் வைத்து ஒவ்வொருவரும் தங்கள் கருத்துக்களை ஒழுங்குபடுத்தி வகுத்து ஒப்பிட்டு நோக்குதல் பெரும் பயனை விளைவிக்கும். இதை விட்டுவிட்டு, தனது நிர்ணய முறைப்படி விரதத்தை அநுட்டிக்காவிடில் பாவமும் பலவகைக் கேடுகளும் உண்டாகும் என்று ஒவ்வொரு கட்சியும் அச்சுறுத்துவதால் என்ன பயன் விளையும்? நான் மேலே கூறியவைகள் எனது சிற்றறிவுக்குப் புலனாகும் கருத்துக்களேயொழிய முடிந்த முடிபுகளல்ல. இவைகளைக் காய்தல் உவத்தல் முதலியனவின்றித் தக்கசரித்திரச் சான்றுகளோடு ஆராய்ந்து பேரறிஞர் எவரேனும் முடிபுகூறின் நமது நாட்டுக்கே பெருங்கலன்விளையுமென்பதில் ஐயமில்லை.

"இந்துசாதனப் பத்திரிகையில் (31-8-31) நவராத்திரி நிர்ணயத்துக்காக ஒரு பெருஞ் சமாஜம் கூட்டுதல் நலமென்றாகருத்து வெளியாயிருக்கிறது இது எனக்கு முற்றிலும் உடன்பாடே. பத்திரிகைகளில் கட்டுரைகள் மூலம் தெளியக்கூடிய பொருளல்ல நவராத்திரி நிர்ணயம் என்ற பெரியதொரு விஷயம். இருகட்சிக் கொள்கைகளையும் விளக்கக்கூடிய பேரறிஞர்கள் ஒருங்கு கூடி ஒரு சபையின்கண் வாதித்து முடிபுக் தெளிவுங் காண்பதே நல்ல முறையாகும். சைவசித்தாந்த மா சமாஜத்தின் ஆண்டுவிழா கானது மார்கழி மாதத்தில் தனவணிகரட்டிலேயே நடைபெறுமென்று எதிர்பார்க்கப் படுகின்றது. அவ்விழாவில் ஒரு நான் கூட்டத்தை இவ்விஷயத்துக்கென்றே ஒதுக்கிவைக்க நான் சித்தமாயிருக்கிறேன். ஆகலில், தமிழ், ஆரியம், சரித்திரம் முதலியவற்றில் நிரம்பிய புலமையாய்ந்த நடுநிலைமையுள்ள பெரியார் ஒருவர் பெயரை இருகட்சியாரும் ஏகமனதோடு குறிப்பிட்டு அவரைத் தலைமை வகித்து முடிபு கூறும்படி செய்தால் இத்தமிழ்நாட்டிலுள்ள விரத நிர்ணயக் குழப்பம் மறைந்துவிடும். இம்முயற்சியில் ஈடுபடுமாறு சைவப்பஞ்சாங்க ஆசிரியரையும், தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தினரையும் இதுவரை "சிவநேசன்" முதலிய பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதியும் பொதுக் கூட்டங்களில் பேசியும் கலந்துகொண்ட பேரறிஞர்களையும் வேறு பலவகைகளில் இவ்விஷயத்தில் ஈடுபட்டுள்ள பெரியார்களையும் மிக வணக்கத்தோடு வேண்டுகிறேன்.

இவ்வளவுநீளம் எழுதிவிட்டு நான் என்னுடைய நினைப்பை நவராத்திரியைக் கொண்டாடப் போகிறேன் என்பதைக் குறிக்காது விடுதல் கோழைத்தனம் என்று இதைக் கண்ணுறுவோர் எண்ணுதல் இயல்பு. நிர்ணயத்தைப் பற்றிய குழப்பத்தில் தெளிவு காண்பதற்குரிய சான்றுகளாவது ஆற்றலாவது எனக்கில்லையென்பதை நானே யறிவேன். பிள்ளைத்தமிழ் போலவே, எம்பிரான் சம்பந்தன் அடிச்சுவட்டை இவ்வழியிலும் பின்பற்றி ஐப்பசி ஓணத்திலேயே இவ்விழாவை நடத்தலாமென்று துணிந்துள்ளேன். இது நான் ஆராய்ந்தறிந்த கண்ட முடிபன்று; குழப்பகாலத்தில் தெளிவு வேண்டி சமயகுரவர் காட்டியவழியில் நடக்கும் செயல் முறையேயாகும். இவ்வாறு நான் செய்வதிலிருந்து ஒரு கணிதம் சரி, மற்றொன்று பிழையென்று நான் கருதுவதாக இருகட்சியாரும் எண்ணுதல் கூடாதென அவ்விரு கட்சியினருக்கும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இருகட்சியினர்க்கும் வேறொரு சிறவிஷயமும் அறிவிக்க எனக்கு ஆவலுண்டு. மேல்நாட்டில் இப்போது ஓராண்டுக்குப் பதின்மூன்று மாதங்களும் மாதம் ஒன்றுக்கு நான்கு வாரங்களும் இருத்தல்வேண்டுமென்று கிளர்ச்சி மிக்க வலியுறுத்திருக்கின்றது. அதையொட்டிக் கிறிஸ்தவ சமயத் தலைவர்கள் (போப், ஆர்ச்பிஷப் ஆப் காண்டர்பரி முதலியோர்) நலவெள்ளி, கிறிஸ்மஸ் (Good Friday, Christmas) முதலிய விரதங்களைப் புதிய முறையில் நிர்ணயிப்பதாகத் தீர்மானித்துள்ளார்கள். அஃதேபோல் நாம் ஆடி யிராவியானக் குழப்பத்தை அறவே யொழித்து, எல்லாஆண்டுகளிலும் சௌரமான ஐப்பசி மாதத்தில் திருவோண நக்ஷத்திரத்தன்றும் அதற்கு முற்றிய எட்டு நாட்களிலும் நவராத்திரி விரதத்தை அநுட்டித்தல் வேண்டுமென்று என் ஏகமனதாகத் தீர்மானித்தல் ஆராது? திருஞானசம்பந்தர் சௌரத்தையே இதற்கு ஆதாரமாக என் கொள்ளக்கூடாது? இவ்விஷயங்களை இருகட்சியினரும் என்னி நடையாடாது சமய குரவர்குரிய உண்மை பக்தியோடு கருதுமாறு வேண்டுகிறேன்.

இங்ஙனம்;

ம. பாலசுப்பிரமணிய முதலியார்,
பி. ஏ. பி. எல்.
"சித்தாந்தம்" ஆசிரியர், காரியதரிசி,
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
150, சோவிந்தப்பநாயகன் தெரு. சென்னை.

வித்தியா விநோத விவேகம்.

[illegible] மையால் இவ்விஷயம் இம் [illegible]

(வை. இ.)

தேவை.

யாழ்:காரைநகர் சுந்தரமூர்த்திநாயனார் மத்திய பாடசாலைக்கு பயிற்றப்பட்ட தீராதரப் பத்திரம் பெற்ற ஒரு ஆண் உபாத்தியாயரும் ஒரு பெண் உபாத்தியாயரும் தேவை. இருவரும் சதிபதிகளாயிருத்தல் மிகவும் விரும்பப்படுவர். விருப்பியோர் ஐப்பசிமீ கo-க் திகதிக்குள் தம் விண்ணப்பப் பத்திரங்களை எமக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

இங்ஙனம்:
க. சுப்பிரமணியம்,
காரியஸ்தர்
சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாசாலை
காரைநகர்.

(Mis 377. 1&5)

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்ற அடைவு பிடிக்கும் திரிகோணமலை 6-ம் நெம்பர் காசுக் கடைவீதி முருகுப்பிள்ளை தாமோதரம்பிள்ளை இராசலிங்கம் என்பவர்களிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த எலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:-

1930-ம்ஆ. 5-ம்மீ

இல.	உ	ரூ.	ச.	நகைகளின் விபரம்.
6291	1	30		தங்க சங்கிலி 1
6311	2	14		சிற இமிற்கல் தோடு சோ 1
6352	5	22		வெள்மட்ட மோதிரம் 4
6355	„	25		பொன் தாலிக்கொடி 1
6403	7	8		வெ தண்டை சோடி 1
6416	„	80		7 பட்டு பலவித மணிக் கோர்வை 1
6438	8	35		5 பட்டு வெள்மட்ட மணிக் கோர்வை 1, சிற சவுக்க மணிக்கோர்வை 1
6509	11	10		பெட்டி மோதிரம் 1
6511	12	6		பூசாந்திரம் 1
6512	„	8		2 பட்டு மணிக்கோர்வை 1
6519	„	8		வளையல் 8
6527	„	6	50	தங்க மோதிரம் 1
6552	13	10		மணிக்கோர்வை 1
6567	„	6		சிற பாதசரம் சோடி 1
6586	15	18		இமிற்கல் தோடு சோ 1
6594	16	15		வெ பாதசரம் சோடி 1
6602	„	8		வெ குழற்காப்பு சோ 1
6614	17	25		சிற பூரானட்டியல் 1
6625	„	16		இ கல் வைத்தோர் 1
6670	19	100		தங்க வெட்டிக்காப்பு சோ 1
6675	„	10		செவ்வந்திப்பூத்தோடு சோ 1
6678	„	10		பொத்தான் 3 உடன் சங்கிலி 1
6682	„	170	04	அச்சுக்காப்பு சோ 1, வெட்டிக் கொலிசு சோ 1
6722	21	7		வெ குழற்காப்பு சோடி 1
6771	23	10		பூசாந்திரமுடன் மணி 8
6802	24	6		குவளை பவுண் 1
6810	25	7		கலாவரை மோதிரம் 1
6844	26	12		வளையல் 8
6865	27	20		தங்க காப்பு 1 [10
6867	„	10		பூசாந்திரம்பின்னுடன் மணி
6887	28	7		சிற இதட்பூ 1
6891	29	15		பூசாந்திரமுடன் மணி 16
6905	„	9		சிற பவுண் காப்பு சோடி 1
6916	30	10		பூசாந்திரம் 1 குவி
6942	31	22		சிற வைச்சங்கிலி 1, சிற மோதிரம் 1
6944	„	20		சிற பவுண் காப்பு சோ 1
1930-ம்ஆ. 6-ம்மீ				
6949	1	13		சிற கொப்புச்சிமிக்கி சோ 1 சிற மணிக்கோர்வை 1க்கு மணி 27
6950	„	9		வெ பழையதண்டை சோ 1
6962	2	18		சிறதங்காப்பு சோ 1 பூ இ
6966	„	20		தங்க காப்பு 1
6967	„	10		வளையல் 8
6968	„	6		குவளை பவுண் 1
6997	3	20		பூசாந்திரமுடன் சினமணி 4, சிறமணி 6, வெ அடைக்குக் காப்பு சோடி 1
6999	„	15		வெ பாதரம் சோ 1
7000	„	65		அரை டலருடன் சங்கிலி 1
7 50	6	12		உட்கட்டு 1க்கு நட்டு 22
7053	„	30		சிற பவுண் காப்பு சோடி 1 குவளை சோடி 1 சு இ
7060	7	10		நட்சத்திரமுடன் பொன் பட்டமணிக்கோர்வை 1
7062	„	12		சிற பவுண் காப்பு சோ 1
7114	9	25		சிற மணிக்கோர்வை 1க்கு மணி 36
7121	„	9		வெ தண்டை சோ 1
7124	„	25		வைச்சங்கிலி 1
7129	10	15		தங்க மோதிரம் 1
7142	„	22		வெ அடைக்குக் காப்பு சோ 1 வெ குழற்காப்பு சோ 1
7144	10	10		காப்பின் 1
7152	„	10		மேலீடு சோ 1, வெ பழைய அரைஞாண் 1
7160	„	6		இ கல் 8 மோதிரம் 1
7161	„	60		சிற வட்டக்கட்டு 2 பூசாந்திர [illegible]
7162	„	25		[illegible]
7163	„	30		4 பட்டு மணிக்கோர்வை 1
7164	„	50		மணிக்கோர்வை 1க்கு மணி 30
7165	„	20		சிற தங்க வெட்டுக் காப்பு சோடி 1
7174	11	35		சமுனுத வளையல் 2
7181	12	15		பூசாந்திரம் பின்னுடன் சின மணி 14
7198	„	14		மூலி பதக்கம் 1
7201	13	12		பூசாந்திரம் பின்னுடன் வெள்மணி 10, மணிக் கோர்வை 1க்கு மணி 28
7204	„	55		சிற காப்பு சோடி 1
7214	14	45		பட்டக் காப்பு சோடி 1
7226	„	20		தங்க கட்டித் தண்டுகள் 4
7258	16	55		பூரானட்டியல் 1 நசி
7260	„	10		வெ அடுக்குக்காப்பு சோடி 1
7270	„	24		பொன் தாலிக்கொடி 1
7273	„	12		தோடுசோடி 1 காராம்புக் குச்சு சோடி 1
7290	„	16		வெ பாதசரம் சோடி 1
7309	17	18		பொற்சறடு 1
7312	„	9		சிற மணிக்கோர்வை 1
7341	20	15	50	பூசாந்திரமுடன் சினமணி 4
7359	21	35		பவுண் 1 உடன் பூரானட்டியல் 1
7363	„	7		சிற தங்காப்பு சோடி 1
7331	„	15		பத சவுக்கமணிக் கோர்வை 1க்கு மணி 20
7396	22	12		வெ குழற்காப்பு சோடி 2
7400	„	6		பொன் கொப்புச் சிமிக்கி சோடி 1
7407	„	9		வளையல் 6
7429	23	7		வளையல் 7 பூ நுறைவு
7432	„	11		பிறையுடன் அரும்பு மணிக் கோர்வை 1 வெ அடுக்குக் காப்பு சோடி 1
7441	„	6		சிறகொப்புச்சிமிக்கி சோ. 1
7489	26	15		வைச்சங்கிலி 1
7492	„	50		பட்டக்காப்பு சோடி 1
7495	„	6		நீலக்கல்மோதிரம் 1
7499	„	12		பத சவுக்கமணிக் கோர்வை 1க்கு மணி 18 பத உடை எ. இ
7505	27	20		வெ பாதசரம் சோடி 1
7527	28	30		தாலித் தட்டுக்கோர்வை 1
7532	„	20		பொன் சம்புனுத வளையல் 2
7572	30	270	04	தாலி குருசு இலையுடன் தாலிக்கொடி 1 பட்டக்காப்பு சோடி 1 பூரானட்டியல் 1

விற்பனவு:—பிரமோதூதஷு ஐப்பசிமீ 7-ம் திகதிக்குச் சரியான (23-10 31) வெள்ளிக் கிழமை காலை 8 மணி தொடக்கம் எடுபட்ட நகை பிறீங்கலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த எலத்தில் விற்கப்படும்.

வி. பொ. விசுவநாத உடையார்,
வெர்தீஸ் மேஸ்தர்.

(Mis 376. 1&5.)

வீட்டுப்பாவிப்புக்கு உபயோகமுள்ள பொருள்கள் 8.

—சொற்பசெலவுடன்
—சுகத்தைப்பாதுகாப்பதற்கு
—உபயோகமுள்ளன.

லி ஓ மருந்துப் பா பெட்டி

—அடங்கியுள்ளன-லிட்டில்ஸ் ஒறியன்ரல்பாம், உளைவு குத்துதலுக்
—குத்திறமான மாற்றம் மருந்து
—குலைப்பன், மலேரியா, காச்சல்
—கட்குத்திறமான 'ஹென்றீஸ்' ஜவ
—ஏஹரி ஹென்றீஸ் ஒமம்-கர்ப்
—பூர், வயிற்றுக்குத்து, சமியாக்
—குணம், வாந்திபேதி முதலிய
—வயிற்றிகுத்தகுந்த சுகங்கொடுப்
—பது. ஹென்றீஸ் கில்லா-கோல்ட்
—ஜலபா. இருமலவில்லைகள், இரு
—மல்கள், சுவாசக்குழலைப்பற்றிய
—ரோகங்கள் முதலிய வற்றிற்கு
—இலேசான மருந்து. லி. ஓ. பா.
—லக்ஸாரப்லெற்ஸ், மிகவும் அபாய
—மற்றபேதிமாத்திரை லி ஓ பா.
இதன் —சர்மரோகசமாக்ஷணி, வெட்டு
விலை —காயம், உரஞ்சல்முதலியவற்றிற்கு
4 —வேண்டியன லி. ஓ பா. மண
—மாற்றி, நச்சுக்காற்றைச்சுத்தி
—சரிப்பதி லாச்சரியப்படத்தக்கது

அதாவது.
நு. 3 அணு 8.—மேற்குறிந்த பொருள்கள் புத்திரைச் செலவுவேறு. அடங்கிய ஒருபெட்டியை மருந்துப்பொருள் வியாபாரியிடம் வாங்குதற்குப் போதியது.

லிட்டில்ஸ்
ஒறியன்ரல்பாம் டிப்போ,
பெரியதெரு,
மணிக்கூட்டுச்சந்தி,
கொழும்பு.
அல்லது
லிட்டில்ஸ் ஒறியன்ரல் பாம், அன்ட்,
பாமசியூடிகல் லிமிட்ட,
தால்பெட்டி இலக்கம் 67.
சென்னபட்டணம்.
2 31—12 931 B.

மேகராஜாங்க எண்ணெய்.

ரசம், வீரம், பூரம், பாஷாணம், நேர்வாளம், முதலியவைகள் கலப்புக்கிடையாது.

இது ஓரேமருந்து; எல்லாவியாதிகளையும்போக்கும். வெட்டைகள், மேகச்சூடுகள், சூலைகள், சிரந்திரோகங்கள், பெருஞ் சிரங்குகள், சொறிசிரங்குகள், கமச்சல், மேகப்படை, மேக வாதல், செம்மேக தடிப்புகள், கருமேக தடிப்புகள், மூட்டுக்குமூட்டு குத்தல், குடைச்சல், வீக்கம், பற்பல வாய்வுகள், ஸ்திரீ சூதகக்கட்டு, கெர்ப்பந் தரிக்காமல் செய்யும் கெடுதிகளை யெல்லாம் சுகப்படுத்தும்.

மேகராஜாங்க எண்ணெய் சீசா 1-க்கு ரூபா 2—8—0.

வி. பி. வேறு.

K. V. வாப்பாதுரை & Co,
பறங்கிப்பேட்டை.

(Y. 18. 28-9-31 To 27-9 32)

The Prudential Assurance Co., Ltd.
புறுடென்ஷல் வீமாக்கொம்பனி.

1930-ம் ஆண்டின் கணக்கால்

ஆதாய நன்கொடை.

வீமாத்திர்த்த ஒவ்வொரு 1000ரூபாவுக்கும் பூரண ஆயுள் வீமாக்களுக்கு (Whole Life Policies) ரூபா 26/- வீதமும், தவணை குறித்த வீமாக்களுக்கு (Endowment Policies) ரூபா 23/- வீதமும் கொடுக்கப்படும்.

ஒவ்வொரு வருஷமும் இத்தகைய பெரும் தொகையான ஆதாய நன்கொடைகளைக் கொடுக்கக்கூடியதும் பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தில் மிகப் பெரியதுமான இக்கொம்பனியில் 2,61,00,000 பேர்கள் உரித்தாளராய்ச் சேர்ந்திருந்து மேற்கூறிய ஆதாயங்களில் பங்குபற்றிவருகிறார்கள். தாமும் அவர்களுடன் சேர்ந்து ஆதாயம் அடையவிரும்பின் விபரங்களுக்கு உடனே எழுதவும்.

டெல்மீஜ் போர்சைத் அன்ட் கோ., லிமிட்டட்.
பிரதான ஏஜண்டுகள், கொழும்பு.
Principal Agents in Ceylon, Delmege Forsyth & Co. Ltd., Colombo.
(Y. 11. 19 to 31-12-31) வி.

அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்ற அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்-மேற்கு நா சுப்பையா அச்சன்ஸ் என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த எலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

1930-ம்ஆ. மேமீ

இல.	திக.	ரூபா.	ஊரும் பெயரும்	நகைகளின் விபரம்.
675	7	18	வண்-கிழக்கு	சின்னப்பா பொன்னம்பலம் பொன் அச்சுக்காப்பு 1
677	7	16	வண்-மேற்கு	சுப்பனுசாரி சோலைமலையாசாரி பொன் இமிற்கல் வைத்த டிம்மி பதக்கம் 1
681	8	18	வண்-கிழக்கு	சின்னப்பா பொன்னம்பலம் பொன் அச்சுக்காப்பு 1
682	9	40	கோண்டாவில்-மேற்கு	சண்முகம் மயில்வாகனம் பொன் சங்கிலி அட்டியல் 1
699	13	40	வண்-மேற்கு	பொன்னையா இராசாத்தினம் பொன் இமிற்கல் மோதிரம் 1, ஒன்றில் திருகில்லாத மினுகாப்பு சோடி 1
703	13	20	வண்-மேற்கு	சுப்பனுசாரி சோலைமையாசாரி பொன் சிறபின்னைக்காப்பு சோடி 1, இமிற்கல்வைத்த தோடு சோடி 1
715	15	8	சோனகதெரு	முகம்மது மீறாலெவ்வை முகம்மது மீறுசாய்பு பொன் இமிற்கல் வைத்த தோடு சோடி 1
735	24	10	வண்-கிழக்கு	சீதாராம் முருகையா பொன் கிளாவர் மோதிரம் 1
733	24	45	வண்-கிழக்கு	செல்லத்துரை அப்புத்துரை பொன் இமிற்கல் வைத்த டிம்மியுடன் கம்பிப்பூரானட்டியல் 1, காதுக் கடுக்கன் சோடி 1
789	7	8	வண் மேற்கு	சின்னத்தம்பி ஆறுமுகம் பொன் ஆடித்தன் மோதிரம் 1
792	7	5	வண்-கிழக்கு	கதிரவேலு கந்தையா வெள்ளிக்கால்சங்கிலி சோடி 1
806	11	10	கொக்குவில்-கிழக்கு	சின்னவன் வயித்தி பொன் பெட்டிமோதிரம் 1
813	14	60	வண்-மேற்கு	நாகிலிங்கம் காசிப்பிள்ளை பொன் பட்டச்சிலைப்புக் கல்வைத்த தோடு சோடி 2
841	17	15	வண்-மேற்கு	செல்லம் அப்பாத்துரை பொன் இமிற் சிலைப்புக்கல் பச்சைக்கல் முத்துகள் வைத்த புரோச் 1
863	22	8	சங்குவேலி	சபாபதிப்பிள்ளை செல்லப்பா வெள்ளிக் கால்சங்கிலி சோடி 1
872	24	25	வண்-கிழக்கு	சபாபதி பொன்னுத்துரை பொன் தாலித்துக் கூடு 1
895	3	30	தாவடி	வடக்கு விஞாநித்தம்பி சின்னத்தம்பி பொன் கம்பிப்பூரானட்டியல் 1
935	13	15	வண்-கிழக்கு	வேலாயுதர் தம்பியப்பா பொன் இமிற்கல்வைத்த சவுத்தோர் 1, கிளாவர் மோதிரம் 1
967	19	190	வண்-மேற்கு	நாகிலிங்கம் காசிப்பிள்ளை பொன் டிம்மிப்பதக்கத்துடன் செட்டிப்பூரானட்டியல் 1, டிம்மியுடன் முறிச்சுக்குத்தி அட்டியல் 1, கம்பிப்பூரானட்டியல் 1 ஷை மூன்றுக்கும் திருகில்லை
974	21	20	கோண்டாவில்	பொன்னர் கந்தசாமி பொன் கிளாவர்மோதிரம் 1, பெட்டி மோதிரம் 1
980	22	50	ஆஸ்டுமீ	ஓட்டுமடம் கார்த்திகேசு கந்தவனம் பொன் முகப்புடன் அச்சுக்காப்பு சோடி 1, மினுகாப்பு சோடி 1
1048	1	100		நீராவியடி குமாரசாமிக்குருக்கள் செல்வத்துரைக் குருக்கள் பொன் அச்சுக்காப்பு சோடி 1, குண்டுச்சங்கிலி மாலை 1
1089	6	18	வண் கிழக்கு	சின்னப்பா பொன்னம்பலம் பொன் அச்சுக்காப்பு 1
1093	9	10	கோண்டாவில்	கார்த்திகேசு கந்தையா பொன் நீலக்கல் மோதிரம் 1
1098	10	25	ஓட்டுமடம்	பொன்னம்பலம் சண்முகராதன் பொன் பின்னலட்டியல் 1, மஞ்சள் கல் பதக்கம் 1
1103	11	45	வண்-கிழக்கு	வெள்ளச்சாமி கோவிந்தசாமி பொன் முகப்பிற்கு இமிற்கல் வைத்த கம்பிப்பூரானட்டியல் 1
1156	19	6	வண்-கிழக்கு	சபாபதி கந்தையா பொன் தாலித்துக்கூடு 1 [குச்சி 1
1162	20	15	வண்-மேற்கு	சுப்பனுசாரி சோலைமலை ஆசாரி வைரசன்னா 1 வைத்த மூக்கு
1167	21	15	ஷையூர்	ஷையர் பொன் பஞ்சாயுதம் 1, சங்கிலி 1
1170	„	7	வண்-கிழக்கு	சேவுகப்பெருமாள் வைரம்பெண் சின்னப்பிள்ளை பொன் இமிற்கல்லுடன் வைத்த புரோச் 1

விற்பனவு:—பிரசோற்பத்திவருஷம் புரட்டாதி மாதம் 28உக்குச் சரியான 1931-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14-ம் திகதி புதன்கிழமை காலை 9மணியளவில் எடுபட்ட நகை புறீங்கலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த எலத்தில் விற்கப்படும்.

வி. ஐயம்பிள்ளை உடையார்
வெர்தீஸ் மேஸ்தர்

(Mis 374. 28&1)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சாக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்கோங்க நற்றவம் வேள்விமல்க மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by S. ADCHALINGAM, residing at Ayanarkovilady, Van: West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna.